திவ்யார்த்த தீபிகை

28.5.1938

5L
O22m311, N26
N38.12.4
157730

155

சேரும்போதும், வாமனனாய் மாவலிபக்கல் எழுந்தருளினபோதும், பேய்ச்சி முலை சுவைத்தபோதும் உடனிருந்து உபசாரம் செய்யப்பெற்றிலேனாகிலும் உன்னுடைய திருமுடிக்கு அலங்காரமாகச் சாத்தும் மாலை என்னுடைய ப்ராணனவதே! என்கிறார். தம்முடைய ஸத்தையையே இங்கு ப்ராணனாகச் சொல்லுகிறபடி. ....

OFFICE OF THE ... BOOKS
JUN 1938
(ரு) MADRAS

கண்ணியெனதுயிர் காதல்கனகச்சோதிமுடிமுதலா *
எண்ணில்பல்கலன்களும் ஏலுமாடையும்அஃதே *
நண்ணிமூவுலகும் நவிற்றும்கீர்த்தியும்அஃதே *
கண்ணனெம்பிரானெம்மான் காலசக்கரத்தானுக்கே.

காலம் சக்கரத் தான்	காலத்தை நடத்துகிற திருவாழியையுடையனாய்	எண் இல் பல் கலன்களும்	கணக்கற்ற பல திருவாபரணங்களாக ஆகாநின்றது;
எம்மான்	எனக்கு ஸ்வாமியாய்	ஏலும் ஆடையும்	ஏற்றதான பீதாம்பரமும்
எம் பிரான்	எனக்கு மஹோபகாரகனான	அஃதே	அந்தக் காதலேயாம்;
கண்ணனுக்கு	ஸ்ரீ க்ருஷ்ணபகவானுக்கு	மூ உலகும்	மூவுலகங்களும்
எனது உயிர்	என் ஆத்மவஸ்து	நண்ணி	கிட்டி
கண்ணி	மாலை போல் போக்யமாகா நின்றது;	நவிற்றும்	துதிக்கின்ற
காதல்	எனது ஆசையானது	கீர்த்தியும்	புகழும்
கனகம் சோதி முடி முதல் ஆ	பொன்மயமாய் ஒளியையுடைத்தான திருவபிஷேகம் முதலாக	அஃதே	அந்தக் காதலேயாம்.

* * * [கண்ணியெனதுயிர்] தம்முடைய உயிரையும் காதலையும் எம்பெருமான் போரப்பொலிய அபிமானித்தபடியைப் பேசுகிறார். எனது உயிர் கண்ணி— என்னுடையதாக அபிமானித்திருக்கிற உயிரை எம்பெருமான் தனக்கு மாலையாகக் கொண்டானென்கை. இங்கே ஈடு—"*மார்வத்து மாலை * என்கிறவளைத் தனக்கு மாலையாகக்கொள்ளுகை ப்ராப்தம்; அதொழிய என்ஸத்தையைக்கிடீர் தனக்கு மாலையாகக்கொள்ளுகிறது" என்பதாம். மாலையணிந்துகொண்டால் என்ன ஆனந்தமுண்டாகுமோ அந்த ஆனந்தம் என்ஸத்தையினால் எம்பெருமானுக்கு உண்டாகிறது என்றபடி.

கனகச்சோதி முடிமுதலா எண்ணில் பல் கலன்களும் எனது காதல்= ஸுவர்ணமயமாய் ஒளிமிக்க கிரீடம் முதலாகிய எண்ணிறந்த பல திருவாபரணங்களும் என்னுடைய காதல் என்றபடி. அதாவது இவருடைய காதலுக்குத் தான் இலக்காகப் பெற்றதுண்டே, அது தன்னையே தனக்குப் பல திருவாபரணங்கள் சாத்தினதாக அவன் திருவுள்ளம்பற்றியிருக்கிறபடி.

ஏலுமாடையும் அஃதே= அந்தக் காதலையே பீதாம்பரமணிந்ததாகவும் எம்பெருமான் அபிமானிக்கிறானென்கை. ஆடைக்கு ஏலும் என்று விசேஷண

N 38

மிட்டது, எம்பெருமான் றனக்கும் பீதாம்பரத்திலே மிக்க விருப்பமுடைமையைக் காட்டும். தான் உகந்து ஏற்றுக்கொள்ளுகிற என்றபடி. இவ்விடத்து ஈட்டில் ஒரு ஐதிஹ்யமுண்டு; அதாவது—"ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரிவட்டங்களை அழகியதாக வாட்டிக்கொண்டு வந்து [ஸலவைசெய்து கொண்டுவந்து] எம்பெருமானார்க்குக் காட்ட, அவரும் பரமத்ருப்தியடைந்து அவனைப் பெருமாள் திருவடிகளிலே கொண்டு புக்கு 'இவன் வெகு மநோஹரமாகத் திருப்பரிவட்டம் திருத்திக்கொண்டு வந்திருக்கிற படியைத் திருக்கண் சாத்தியருளவேணும்' என்று சொல்லித் திருப்பரிவட்டங்களைக் காட்டியருள, பெருமாளும் கண்டு உகந்தருளி உடையவரைநோக்கி 'வாரீர்! இவனுக்காக, முன்பு ரஜகன் நம்திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்' என்று திருவாய் மலர்ந்தருளினார்" என்று.—வண்ணான் முன்புசெய்த குற்றமாவது—கண்ணபிரானும் பலராமனும் அக்ரூரரால் அழைக்கப்பட்டு மதுரைக்கு எழுந்தருளின போது அவ்வூரிலுள்ள ராஜவீதியில் கம்ஸனுடைய வண்ணான் துணிமூட்டைகளைச் சுமந்துகொண்டுவர, இவ்விருவரும் அவனிடத்தில் வஸ்த்ரம் விரும்ப, அவன் கொடாதொழிந்தது.

மூவுலகும் நண்ணி நவிற்றும் கீர்த்தியும் அஃதே—தம்முடைய காதலையே எம்பெருமான், மூவுலகிலுள்ளாரும் தன்னைக் குறித்துப் பண்ணுகிற ஸ்துதிபாகத் திருவுள்ளம்பற்றின னென்க. ஆழ்வாரொருவர் கடல்புரைய விளைந்த காதலோடு எம்பெருமானைத் துதிப்பதானது மூவுலகும் ஒன்றுசேர்ந்து துதித்தாப் போலுள்ளது என்றவாறு.

இதெல்லாம் யாருக்கென்னில், **கண்ணனெம்பிரா னெம்மான்காலசக்கரத்தானுக்கே**—கையும் திருவாழியுமான அழகைக்காட்டி என்னை யீடுபடுத்திக்கொண்ட பெருமானுக்கு என்றபடி. **காலசக்கரத்தான்**—காலத்தை நடத்துகிற திருவாழியையுடையவன் என்கை. பாரதப்போரில் பகலை யிரவாக்கினமை நினைக்கத்தக்கது. காலசக்ரத்தை நிர்வஹிப்பவனான எம்பெருமான் என்றும் பொருள் கூறலாம்; கீழ்த் திருவாய்மொழியில் இவர் விரும்பினபடி காலோபாதியைக் கழித்துப் பூர்ணாநுபவம் பண்ணுவித்ததற் கிணங்க இங்ஙனேயருளிச் செய்தபடியாகலாம். .... (ரு)

காலசக்கரத்தோடு வெண்சங்கம்கையேந்தினாய்! *
ஞாலமுற்றுமுண்டுமிழ்ந்த நாராயணனே! என்றென்று *
ஓலமிட்டுநானழைத்தால் ஒன்றும்வாராயாகிலும் *
கோலமாமென்சென்னிக்கு உன்கமலமன்னகுரைகழலே. (சூ)

காலன் சக்கரத்தொடு	(பகைவரையழிப்பதில்) யமன்போன்ற திருவாழியோடுகூட	ஞாலம் முற்றும்	உலகமுழுவதையும்
வெண் சங்கு	வெளுத்த சங்கத்தை	உண்டு உமிழ்ந்த	ஒருகால் விழுங்கி மற்றொருகால் வெளிப்படுத்தின
அம் கை	அழகிய திருக்கையிலே	நாராயணனே	நாராயணா!
ஏந்தினாய்	தரித்திருப்பவனே!	என்று என்று	என்று பலகால் சொல்லி

159930

ஓலம் இட்டு	கூப்பிட்டு	கமலம் அன்ன	தாமரை மலர்போன்ற
நான் அழைத்தால்	நான் அழைக்க	குரை கழல்	ஒலிக்கின்ற வீரக்கழலையணிந்த திருவடிகள்
ஒன்றும் வாராய் ஆகிலும்	நீ சிறிதும் வந்தருளாமற்போனாலும்	என் சென்னிக்கு	எனது தலைக்கு
உன்	உன்னுடைய	கோலம் ஆம்	அலங்காரமாகாநின்றது.

* * * [**காலசக்கரத்தோடு**] கீழ்ப்பாசுரங்களில் எம்பெருமானுடைய ப்ரணயித்வம் சொல்லிற்று; இப்பாசுரத்தில் தம்முடைய ப்ரணயித்வம் சொல்லுகிறது. **காலன்** என்று யமனுக்குப் பேராதலால், எதிரிகளுக்கு யமன் போன்றதான சக்கரம் என்று பொருளாகலாம். திருவாழி திருச்சங்குகளைக் கையிலேந்தினவனே! என்றும், பிரளயாபத்திலே உலகங்களையெல்லாம் திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்துப் பிறகு வெளிப்படுத்தினவனே! என்றும், நாராயணனே! என்றும் இப்படிப் பலவற்றையுஞ் சொல்லிப் பெருமிடறு செய்து நான் அழைக்கச்செய்தே, நீ இங்கு விரைந்து ஓடிவரவேண்டியிருந்தும் வாராதிருந்தாயாகிலும் என்தலைக்கு ஆபரணமாவது உன் திருவடிகளே யென்கிறார்.

எம்பெருமான் இவர் பக்கலிலே வந்து சேர்ந்தாலன்றோ அவனுடைய திருவடிகள் இவரது சென்னிக்கு ஆபரணமாகும்; அவன் வாராதேயிருந்தால் அவன் திருவடிகள் இவரது சென்னிக்கு எங்ஙனே கோலமாகும்? என்றுகேள்வி பிறக்கும்; இதற்கு ஸமாதானமான ஈட்டு ஸ்ரீஸூக்திகாண்மின்;—"**வாராயாகிலும் கோலமாம்** என்பானென்னென்னில்; வாராதொழியக்கூடாது; கூடாதது கூடிலும் என்னினைவு இதுவென்கிறார். என்னை அடியிலே இப்படி ஆக்கினாயே யென்று கருத்து."

உன் திருவடிகளிலே எனக்கு ப்ரேமம் ஸத்தாப்ரயுக்தமென்பது பரம தாத்பர்யம். ... ... (சூ)

குரைகழல்கள்நீட்டி மண்கொண்டகோலவாமனா! *
குரைகழல்கைகூப்புவார்கள் கூடநின்றமாயனே! *
விரைகொள்பூவும்நீரும்கொண்டு ஏத்தமாட்டேனேலும் * உன்
உரைகொள்சோதித்திருவுருவம் என்னதாவிமேலதே. (எ)

குரை கழல்கள் நீட்டி	(வீரக்கழல்) ஒலிக்கப்பெற்ற திருவடிகளைப் பரப்பி	கூட நின்ற	தன்னையே வந்து அடையும்படி நின்ற
மண் கொண்ட	ஜகத்தை அளந்து கொண்ட	மாயனே	ஆச்சரிய பூதனே!
கோலம் வாமனா	வடிவழகிய வாமனமூர்த்தியே!	விரை கொள் பூவும்	பரிமளம்மிக்க புஷ்பங்களையும்
குரைகழல்	அத்திருவடிகளைக் குறித்து	நீரும்	(பாத்யம் முதலியவற்றுக்கான) தீர்த்தத்தையும்
கை கூப்புவார்கள்	ஓர் அஞ்ஜலி பண்ணுமவர்கள்	கொண்டு	ஏந்திக்கொண்டு
		ஏத்த மாட்டேன் ஏலும்	உன்னைத் துதிக்கவல்லேனல்லேனெனினும்,

உரை கொள் சோதி	வாய்கொண்டு சொல்லவொண்ணுதபடி வாக்கைமீறியிருக்கின்ற சோதியையுடைய
உன் திரு உருவம்	உன்னுடைய திருமேனியானது

என்னது ஆவி மேலதுவே	என்னுடைய ஸத்தையைப்பற்றியிரா நின்றதே! இது என்ன அற்புதம்!.

* * * [குரைகழல்கள்.] நான் ஒருவிதமான கிஞ்சித்காரமும் செய்யப்பெற்றிலேனாகிலும், அநந்யார்ஹமாக்கி அடிமைகொள்ளுமியல்வினனான வுன்னுடைய வடிவு என் ஆத்மாவை விஷயீகரித்திராநின்றதென்கிருர்.

"குரைகழல்கள் நீட்டி மண்கொண்ட" என்ற இவ்விடத்து ஒரு சங்கையுண்டாகும்; பகவான் மாவலியிடத்து நீரேற்றுப் பெற்றபின்பு ஒரு திருவடியினால் மண்ணுலகத்தையும் மற்றொரு திருவடியினால் விண்ணுலகத்தையும் அளந்தருளினதாகவன்றோ வரலாறு; இங்கு 'மண் கொண்ட' என்றதற்குச் சேர 'குரைகழல் நீட்டி' என்று ஒருமையாக இருக்கவன்றோ தகுவது; 'குரைகழல்கள்' என்று பன்மையாக இருக்கத் தகுதியில்லையே; "மண்ணும் விண்ணுங் கொண்ட" என்றிருந்தாலன்றோ 'கழல்கள் நீட்டி' என்ற பன்மை பொருந்தும்—என்பதாக:

இதற்கு இரண்டுவகையாகப் பரிஹாரம் கூறலாம்; "பூஜாயாம் பஹுவசநம்" என்ற வட நூலாரின் முறை தமிழர்க்கும் உடன்பாடேயாதலால் ஒரு திருவடியையே பன்மையாகக் கூறினது உபசாரம் பற்றி என்னலாம்; அன்றி, மண் என்றது பொதுப்பட உலகத்துக்கு வாசகம் என்று கொண்டு, கீழுலகங்களையும் மேலுலகங்களையும் அளந்துகொண்ட என்றதாகக்கொள்ளலாம். மண் என்றது விண்ணுக்கும் உபலக்ஷணம் என்னலாமாயினும் இந்த ஸமாதானம் பஹுவசந நிர்வாஹகமாகாது. மற்றும் வல்லார் வாய்க் கேட்டுணர்க.

கோலவாமனு= மண் இரக்குங்காலத்தில் வாமன வேஷமிருந்ததேயன்றி மண்கொண்டகாலத்தில் அந்தத் திருக்கோலமில்லையே; "மண்கொண்ட திரிவிக்கிரமா!" என்றன்றோ சொல்லியிருக்கவேண்டும்; குரைகழல்கள் நீட்டியானபின்பு கோலவாமனுகக் கூறத்தகுதியில்லையே! என்று சங்கை பிறக்கும்; இதற்கு நம்பிள்ளையருளிச்செய்யுமது காணீர்;—"மண்கொண்டபின்பும் வாமந வேஷம் இவர் திருவுள்ளத்திலே ஊற்றிருந்தபடி: இந்த்ரனுக்கு ராஜ்யங்கொடுக்கைக்காகவன்றிக்கே தம்மை அநுபவிப்பிக்கைக்காக அவ்வடிவுகொண்டானென்றிருக்கிருர்" என்று.—த்ரிவிக்ரமனை கோலத்திற்காட்டிலும் * மன்னன்றன் தேவிமார் கண்டு மகிழ்வெய்தக்கொண்ட மாண்குறள் கோலவடிவே மிகவுமழகியதாதலால் அதனை எம்பெருமான் மாற்றிக்கொண்டாலும் ஆழ்வார் திருவுள்ளம் மாற்றிக்கொள்ள இசையவில்லை போலும்.

குரைகழல் கை கூப்புவார்கள் கூடநின்ற மாயனே != தனியே இதுவொரு விளி; உன்னுடைய திருவடிகளை நோக்கி அஞ்ஜலி பண்ணுமவர்கள்

யாவரோ அவர்கள் உன்னைக் கூடுவர்கள் என்பது ஒரு பொருள்; "கைகூப்புவார்கள் குரைகழல் கூட நின்றமாயனே!" என்று அந்வயமாக்கி, உன்னை நோக்கி ஓர் அஞ்ஜலி பண்ணுமவர்கள், திருவடிவாரத்திலே நித்யவாஸம் பண்ணலாம்படி அவர்களை விஷயீகரிப்பவனே! என்பது மற்றொரு பொருள். ஓர் அஞ்ஜலி பண்ணினவளவுக்கு இத்தனை பலனுவதே! என்ற வியப்புத்தோன்ற மாயனே! என்கிருர். சிலரை ப்ரயோஜநாந்தரங்களுக்காகத் திருவடிகளில் வந்து வணங்குமாறு செய்வதும், சிலரை அநந்ய ப்ரயோஜநமாக வணங்கச் செய்து "உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்று மங்களாசாஸநமே யாத்திரையாம்படி செய்வதுமாயிருக்கிற (எம்பெருமானது) மாயச்செயலைத் திருவுள்ளம்பற்றி மாயனே! யென்கிருர்.

[விரைகோள் பூவும் இத்யாதி.] ஓர் அஞ்ஜலி மாத்திரத்தினுல் அடையலாம்படி எளியனுயிருக்கிற உன் விஷயத்திலே சில புஷ்பங்களையும் தீர்த்தத்தையுங்கொண்டு வழிபாடுசெய்து ஸ்வரூபம் நிறம்பெற ப்ராப்தமாயிருக்க, அங்ஙனம் பெற்றிலேனேயாகிலும், உள்ளுடைய திருவடிவுக்கு என் ஆத்மஸத்தையே தாரகமாயிற்றே! இதென்ன ஆச்சரியமென்கிருர். "ஆழ்வாருண்டானுல் நானுண்டு" என்று எம்பெருமான் திருவுள்ளம்பற்றியிருக்கிறபடியை ஆழ்வாரறிந்து அருளிச்செய்தாராயிற்று.

உரைகோள் சோதித்திருவுருவம்= இங்கே ஈடு;—"உரைகொள்ளுகையாவது, அது அது என்று வாய் புலற்றும்படியாயிருக்கை. * [illegible] ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:, ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரசாஸதி. * என்று நிற்பர்களிறே. அன்றிக்கே, பேச்சுக்கு அவிஷயமான திருமேனியென்னுதல். மாற்றுமுரையுமற்ற திருமேனியென்னுதல்." .... (எ)

என்னதாவிமேலையாய் ஏர்கொளேழுலகமும் *
துன்னிமுற்றுமாகிநின்ற சோதிஞானமூர்த்தியாய் *
உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும் *
இன்னவண்ணமேநின்றய் என்னுரைக்கவல்லலேனே? (அ)

என்னது ஆவி மேலையாய்	என் ஆத்மவஸ்துவிலே அபிநிவேசமுடையனாய்க்கொண்டு
ஏர் கொள் எழ் உலகமும்	அழகிய ஸகல லோகங்களிலும்
துன்னி	பூர்ணமாக வியாபித்து
முற்றும் ஆகி நின்ற	ஸகல பதார்த்தங்களும் தனக்கு ப்ரகாரமாம்படி நின்ற
சோதி ஞானம் மூர்த்தியாய்	சோதிமயமான ஞானத்தை ஸ்வரூபமாக வுடையவனே!

என்னது ஆவி	என் ஆத்மஸ்வரூபம்
உன்னதும	நீயிட்ட வழக்காகவும்
உன்னது ஆவி	உன் ஆத்மஸ்வரூபம்
என்னதும்	நானிட்ட வழக்காகவுமான
இன்ன வண்ணமே நின்றய்	இப்படியிலே நின்றய்;
என் உரைக்க வல்லேன்	இதற்கு என்னபாசுரமிட்டுச் சொல்லுவேன்?.

* * * [என்னதாவி மேலையாய்.] எனக்காக ஸகலலோகங்களையும் வியாபித்து என்னையங்கீகரித்த உன் படி பேச்சுக்கு நிலமன்று என்கிறார்.

என்னதாவி மேலையாய் என்பதற்கு இரண்டுபடியாக நிர்வாஹம்;—என்னுடைய ஸத்தையைப்பெற்று அத்தாலே மிகுந்த ஆனந்தம் படைத்தவனே! என்னுதல்; என்னைப்பெறவேணுமென்கிற ஆவலையுடையவனே! என்னுதல். உள்ளதான சொல்வடிவம் இவ்விரண்டுவகை நிர்வாஹத்திற்கும் எங்ஙனே இடந்தருகின்றதென்னில்; என்னதாவி மேலையாய் என்பதற்கு என்னுடைய ஆவியின்மேலேயிருப்பவனே! என்பது பதப்பொருள்; மேலே காட்டிய இரண்டு வகையான கருத்தும் இதில் உறையும்; ஆசைப்பட்ட ஒரு வஸ்துவைப் பெற்றுவிட்டவன் விஷயத்திலும் பெற நினைப்பவன் விஷயத்திலும் இங்ஙனே சொல்லத்தகும். கீதையில் ஸததயுக்தாநாம் என்பதற்கு "ஸததயோகம்காங்க்ஷமாணாநாம்—ஸததயோகம் காங்க்ஷமாணநாம்" என்று எம்பெருமானார் பொருள் பணித்ததும் இங்கு ஒரு புடை ஒப்புநோக்கத்தக்கது.

பெற்றுத் தீர்ந்துவிட்டதாகச் சொல்லுகிற அர்த்தமும், பெறவேணுமென்று ஆவல்கொண்டிருப்பதாகச் சொல்லுகிற அர்த்தமும் ஒன்றோடொன்று பொருந்தாததலால் மேலே காட்டிய இரண்டு நிர்வாஹங்களையும் விகல்பமாகக் கூறியிருப்பது எங்ஙனே பொருந்துமென்று சங்கை பிறக்கக்கூடும்; இவ்வர்த்தங்களுக்குப் பொருந்தாமையொன்றுமில்லை; ஆழ்வார் விஷயத்திலே எம்பெருமான் பெற நினைத்திருக்கும் அளவுகள் பலபலவுண்டு; அவற்றில் பெற்றுத் தலைக்கட்டியவை சில; இனிப் பெறவேண்டியவை சில; எந்த வஸ்து பெற்றுத்தீர்ந்ததோ, அதிலேயே பெறவிருப்பமும் உள்ளதாகக் கூறினாலன்றோ விரோதமுள்ளது என்றுணர்க.

[ஏர்கொளேழுலகமும் இத்யாதி.] இதற்கும் இரண்டுபடியாக நிர்வாஹம்; என்னதாவி மேலையாய்! என்றதற்கு 'என்னுடைய ஸத்தையைப் பெற்று அத்தாலே மிகுந்த ஆனந்தம் படைத்தவனே!' என்று பொருள் கொள்ளும் பக்ஷத்தில் அதற்குச் சேர இதற்கும் பொருள் கொள்ளவேண்டும்; ஏற்கனவே எம்பெருமான் எங்கும் நிறைந்திருந்தாலும் இப்போது ஆழ்வாரைப் பெற்ற ப்ரீதியாலே அந்த வ்யாப்தி இப்போதே ஸபலமானதாக எம்பெருமான் நினைத்த நினைவு தோற்றச் சொல்லுகிறபடி. இதற்கு முந்தி வ்யாபகனன்றிக்கே இப்போதுதான் வ்யாபகனானானென்றபடி. 'என்னதாவிமேலையாய்!' என்பதற்குக் கூறிய இரண்டாவது நிர்வாஹத்திற்குச் சேர, தம்மை அகப்படுத்திக் கொள்ளுகைக்காக எம்பெருமான் எங்கும் வியாபித்திருக்கிறானைக் கூறுவதாய்ப் பொருள்கொள்ளவேணும். ஈடு;—"[ஏர்கொளித்யாதி.] இவரைப் பெற்ற ப்ரீதியாலே வ்யாப்தியும் புதுக்கணித்தகென்னுதல்; ஒருவனைப் பிடிக்க நினைத்து அவன் பக்கலுண்டான அபிநிவேசத்தாலே ஊரை வளைவாரைப்போலே, தம்மை அகப்படுத்துக்கைக்காக வ்யாப்தனானானென்றிருக்கிறாராதல்.

[உன்ன தேன்ன தாவியும் இத்யாதி.] என் ஸ்வரூபம் நீ இட்ட வழக்கு, உன் ஸ்வரூபம் நானிட்டவழக்கு என்பது தேர்ந்தபொருள். இவ்விடத்தை

ஆளவந்தார் அருளிச்செய்யும்போது கேட்டிருந்த முதலிகளிலே சிலர் 'ஜீவாத்மாவின் ஸ்வரூபம் பரமாத்மா இட்ட வழக்கு என்றால் இதில் பொருந்தாமையொன்றுமில்லை; பரமாத்மாவின் ஸ்வரூபம் ஜீவாத்மா இட்டவழக்கு என்கிறதே, இதுவென்? இது பொருந்துமோ? என்றார்களாம்; அப்போது ஆளவந்தார் அருளிச்செய்தபடி—"இவன் அவனிட்டவழக்கு என்கிற விஷயத்தில் கர்மம் தடையாக நிற்கவுங்கூடும்; ஸர்வேச்வரன் தன்னை இவனிட்ட வழக்காக்குமிடத்தில் தடை செய்வாரில்லை; ஆனபின்பு 'உன்னதாவி என்னது' என்பதுதான் நிர்விவாதம்; 'என்னதாவி உன்னது' என்றதில் நீங்கள் விவாதப்பட்டால்படலாமேயல்லது 'உன்னதாவிஎன்னது' என்றதில்விவாதப்படநியாயமில்லை" என்றும்.

இப்படி ஒரு நீராகக் கலந்து பரிமாறும் ப்ரணயித்வகுணம் என்னால் பேசித் தலைக்கட்டலாயிருந்ததோவென்று முடித்தாராயிற்று. ... ... (அ)

உரைக்கவல்லேனல்லேன் உன்னுலப்பில்கீர்த்திவெள்ளத்தின் *
கரைக்கணென்றுசெல்வன்நான் காதல்மையலேறினேன் *
புரைப்பிலாதபரம்பரனே! பொய்யிலாதபரஞ்சுடரே! *
இரைத்துநல்லமேன்மக்களேத்த யானுமேத்தினேன். (கூ)

புரைப்புஇலாத பரம்பரனே	புரையற்ற பரத்வம் பொருந்திய எம்பெருமானே!	நான் என்று செல்வன்	நான் என்றைக்கு அடியிடுவேன்? (ஒரு நாளும் அடியிடமாட்டேன்;)
பொய் இலாத	(என்னோடுண்டான கலவியில்) பொய்யில்லாத	காதல்	ப்ரேமத்தினால்
பரம் சுடரே	பரஞ்சோதிப் பெருமானே!	மையல் ஏறினேன்	பிச்சேறிக் கிடக்கிறேனத்தனை
உரைக்க வல்லேன் அல்லேன்	நான் ஒன்றும் சொல்ல சக்தியுடையேனல்லேன்;	நல்ல	விலக்ஷணர்களான
உலப்பு இல்	முடிவில்லாத	மேல் மக்கள்	நித்யஸூரிகள்
உன் கீர்த்தி வெள்ளத்தின்	உனது ப்ரணயித்வ குணக்கடலினுடைய	இரைத்து ஏத்த	பேராரவாரஞ்செய்து துதிக்க (அவ்வழியைப் பின்பற்றி)
கரைக் கண்	கரையிடத்து	யானும் ஏத்தினேன்	நானும் சிறிது துதித்தேனித்தனை.

* * * [உரைக்கவல்லேனல்லேன்] எம்பெருமானுடைய ப்ரணயித்வகுணம் தம்முடைய பேச்சுக்கு நிலமன்று என்பதை அழகுபட அருளிச்செய்கிறார். உரைக்கவல்லேனல்லேன்—— உன்னுடைய ப்ரணயித்வ குணத்தை அநுபவித்தநுபவித்து உள்ள முருகுவேனத்தனையொழிய இன்னபடி யென்று பேசவல்லேனல்லேன் என்றபடி. முழுதும் பேசமுடியாமற்போனாலும் பேசலாமளவு பேசினாலோவென்ன, உன் உலப்பில் கீர்த்தி வெள்ளத்தின் கரைக்கண் என்று செல்வன் நான் என்கிறார்; உன்னுடைய ப்ரணயித்வ குணஸமுத்ரத்தின் கரையிலேதான் என்னால் அடியிடமுடியுமோ? என்கை. கடலினுள்ளே இறங்க முடியுமா முடியாதா என்கிற விசாரம் ஒரு புறமிருக்கட்டும்; கடற்கரைதன்னில் சென்று நிற்கவும் ப்ரஸக்தியில்லையே என்கிற இச்சொல்லழகு சாலவும் ரஸிக்கத்தக்கது.

இங்ஙனே கரையருகும் செல்லப்போகாத விஷயத்தில் நீர் ஏதோபேசிக் கொண்டிருக்கிறீரே, இஃது என்ன? என்று எம்பெருமான் கேட்டனனாகக் கொண்டு காதல் மையலேறினேன் என்கிறார். ப்ரேமத்தாலே கலங்கினேன்; கலங்கினவர்களின் செயலுக்கு ஓர் அடைவுமுண்டோ என்றவாறு.

ஆழ்வீர்! உம்முடைய சொற்களை நோக்குமிடத்து, நீர் என்னுடைய குணக்கடலைக் கரைகண்டவராகத் தோற்றுகின்றீர்; இல்லையாகில் பெரிய பெரிய துதிமொழிகளைப் பேசப்புறப்பட்டிருக்கமாட்டீரே யென்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றினதாகக் கொண்டு, இரைத்து நல்ல மேன்மக்களேத்த யானுமேத்தினேன் என்கிறார்.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்திகள் இன் சுவையே வடிவெடுத்தவை; அவை வருமாறு:— "இவ்விஷயத்தில் நீர் ப்ரமிப்பானேன்? ப்ரமிப்பாருக்கு ஓர் ஆலம்பநம் வேண்டாவோ வென்ன, நித்ய ஸூரிகள் பித்தேறி ஏத்தக்கண்டேன். அத்தாலே செய்தேனென்கிறார். நித்ய ஸூரிகளோடு இவரோடு அவன்றன்னோடு வாசியற்றிறே இவ்விஷயமிருப்பது. ஸர்வஜ்ஞனாய் ஸர்வ சக்தியான தான் அறியப்புக்காலும் தனக்கும் தன் தன்மையறிவரியனாயிறேயிருப்பது; தன்னையறியப் புக்க வேதங்கள் பட்டது படுமத்தனை தானும். [புரைப்பிலாத பரம்பரனே பொய்யிலாத பரஞ்சுடரே!] நீ ஸர்வஸ்மாத்பரனாயிருக்கிற இருப்பில் புரையில்லாதாப் போலே என்னோட்டைக் கலவியால் வடிவிற்பிறந்த புகரிலும் புரையின்றிக்கேயிருக்கிறவனே!. அன்றிக்கே, நிரவதிகமான ப்ரணயித்வகுண ஸத்பாவத்தில் கண்ணழிவில்லாதாப்போலே என்னோட்டைக் கலவியிலும் பொய்யின்றிக்கே அத்தால் வந்தபுகர் வடிவிலே தோற்றவிருக்கிறவனே யென்னுதல்..........பரம பக்தியுக்தராய்க்கொண்டு கடல்கிளர்ந்தாப்போலே இரைத்துக்கொண்டு நித்ய ஸூரிகள் ஏத்தக்காண்கையாலே நானும் ஏத்தினேனல்லது, நான் சக்தனாய் ஏத்தினேனோவென்கிறார்." .... (௯)

யானுமேத்தி ஏழுலகுமுற்றுமேத்தி * பின்னையும்
தானுமேத்திலும் தன்னையேத்தவேத்தவெங்கெய்தும்? *
தேனும்பாலும்கன்னலும் அமுதுமாகித்தித்திப்ப *
யானுமெம்பிரானையேயேத்தினேன் யானுய்வானே. (௧௦)

யானும்	எம்பெருமானருளால் அறிவுபெற்ற நானும்
ஏத்தி	துதித்து,
முற்றும் ஏழ் உலகும் ஏத்தி	எல்லாவுலகங்களும் ஒன்று கூடி யேத்தி,
பின்னையும்	அதற்குமேலே
தானும் ஏத்திலும்	ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தனான தானுங்கூடி ஏத்தினாலும்
தன்னை ஏத்த ஏத்த	தன்னைத் துதிக்கத் துதிக்க
எங்கு எய்தும்	முடிவு பெறுவது எது? (ஆகிலும்)
யான் உய்வான்	நான் தரித்திருப்பதற்காகவே,
தேனும் பாலும் கன்னலும் அமுதும் ஆகி தித்திப்ப	தேனும் பாலும் கன்னலும் அமுதும் போலே ரஸிக்க,
எம்பிரானையே ஏத்தினேன்	எம்பெருமானையே ஏத்தினேன்.

* * * [யானுமேத்தி.] ஒருவராலும் எல்லைகாண வொண்ணாதபடி அளவிறந்த பெருமையையுடைய பெருமானை நான் ஸத்தை பெறுவதற்காக ஏத்தினேனத்தனை யென்கிறார். யானுமேத்தி என்ற விடத்துள்ள உம்மையை உயர்வுசிறப்பும்மையாகக் கொள்ளலாம்; "மயர்வற மதிநலமருளினன்" என்று முதலடியிலே சொல்லும்படி அருள்பெற்ற நானும் என்றபடி. ஏழுலகும் முற்றும்—பேரறிவுடையார் சிற்றறிவுடையார் என்கிற வாசியில்லாமல் எல்லாரும் ஏத்துவது. பின்னையும் தானுமேத்திலும்=ஸர்வஜ்ஞனென்றும் ஸர்வசக்தனென்றும் பேர் பெற்றிருக்கின்ற எம்பெருமான் தானும் ஏத்துவது. இங்ஙனே எல்லாருங்கூடியேத்தினாலும் முடிவுகாண்பதென்பதுண்டோ?

இங்கே ஈடு;— "மயர்வற மதிநல மருளப்பெற்ற தாமுமேத்துவது; விசேஷஜ்ஞரோடு அவிசேஷஜ்ஞரோடு வாசியறச் சிறியார் பெரியார் என்னாதே ஸர்வரும் ஏத்துவது; ஸ்வதஸ் ஸர்வஜ்ஞனாய், தொடங்கின காரியம் செய்து தலைக்கட்டுகைக் கீடான ஸர்வசக்தியுமான தானும் ஏத்துவது; இப்படி யெல்லாரும் ஒருமிடறாயேத்தினாலும், பின்னையும் ஏத்தினவிடம் அளவுபட்டு ஏத்தாதவிடம் விஞ்சியாயிற்றிருப்பது விஷயம். அந்யபரரோடு அநந்யபரரோடு அளவுடையாரோடு அளவிலிகளோடு வாசியில்லை விஷயத்தை எல்லைகாண வொண்ணாமைக்கு."

இப்படியறிந்து வைத்தும் ஏத்துகையிலே நீர் பிரவர்த்தித்தது என்? என்ன, விஷயம் பரமரஸ்யமாக இருப்பதனாலும், இதிலே 'கைவைக்கும்படி அவன் பண்ணின மஹோபகாரத்தைச் சிந்தை செய்ததனாலும் ஏத்தப்புகுந்தேனென்கிறார். பின்னடிகளினால் ஏத்தாதிருக்கில் பிழைத்திருக்கமாட்டாமையாலும் ஏத்தினேனென்கிறார் யான் உய்வான் என்பதனால். .... (ய)

உய்வுபாயம்மற்றின்மைதேறிக் கண்ணனொண்கழல்கள்மேல் *
செய்யதாமரைப்பழனத் தென்னன்குருகூர்ச்சடகோபன் *
பொய்யில்பாடலாயிரத்துள் இவையும்பத்தும்வல்லார்கள் *
வையம்மன்னிவீற்றிருந்து விண்ணுமாள்வர்மண்ணூடே. (௧௧)

மற்று	வேறுவழியினால்
உய்வு உபாயம் இன்மை	தரிக்கவிரகில்லாமையை
தேறி	துணிந்து
கண்ணன்	எம்பெருமானுடைய
ஒண் கழல்கள் மேல்	அழகிய திருவடிகள் விஷயமாக,
செய்ய தாமரை பழனம்	செந்தாமரைகள்நிறைந்த நீர்நிலங்களையுடைய
தென் நன் குருகூர்	தென் திசையிலுள்ள அழகிய திருக்குருகூர்க்குத் தலைவரான
சடகோபன்	ஆழ்வார் (அருளிச் செய்ததான)
பொய் இல் பாடல் ஆயிரத்துள்	யதார்த்தம் பொருந்திய ஆயிரத்தினுள்ளும்
இவை பத்தும்	இப்பத்துப் பாசுரங்களையும்
வல்லார்கள்	ஓதவல்லவர்கள்
வையம்	இப்பூமண்டலத்திலே
மன்னி வீற்றிருந்து	நெடுங்காலம் பொருந்தியிருந்து

மண்ணூடே	இந்நிலத்திலேயே	விண்ணும் ஆள்வர்	பரமபதத்தையும் ஆளப்பெறுவர்கள்.

* * * [உய்வுபாயம்.] இத்திருவாய் மொழி கற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டுகிறது இப்பாட்டு. இத்திருவாய் மொழியை ஓதுமவர்கள் உபய விபூதியையும் தாம் இட்ட வழக்காக நிர்வஹிக்கப் பெறுவர்களென்கிறார்.

இத்திருவாய்மொழியினால் எம்பெருமானுடைய ப்ரணயித்வகுணத்தைப் பேசப்புகுந்தது, பேசித் தலைக்கட்டலாமென்கிற எண்ணத்தினாலன்று; இங்ஙனே பேசினாலல்லது வேறொன்றாலே தரிக்க வொண்ணாமையாலே பேசிற்றென்பதை வெளியிடுகிறார் உய்வுபாயம் மற்றின்மைதேறி யென்பதனால்.

பொய்யில் பாடலாயிரம்—வால்மீகிபகவானுக்குக் காட்சிதந்த நான்முகக் கடவுள் "[illegible]—ந தே வாகந்ருதா காவ்யே காசிதத்ர பவிஷ்யதி, குரு ராமகதாம் புண்யாம் ச்லோகபத்தாம் மநோரமாம்." என்று அருள் செய்ததனால் ஸ்ரீராமாயணம் பொய்யில் பாடலாக அமைந்தது; இத்திவ்வியப் பிரபந்தம் எம்பெருமானது திருவருளாலே பொய்யில் பாடலாக அமைந்ததாயிற்று. "வேதநூல் ஓதுகின்றதுண்மையல்லதில்லை மற்றுரைக்கிலே" (திருச்சந்தவிருத்தம்) என்று வடமொழிவேதத்திற்குச் சொல்லப்பட்ட ஸத்யவாதித்வம் தமிழ்வேதத்திற்கும் குறையற்றதென்க.

வையம்மன்னி வீற்றிருந்து மண்ணூடே விண்ணுமாள்வர்—"பூமியிலே எம்பெருமானைப்போலே ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயோடே நெடுங்காலமிருந்து இங்கேயிருக்கச்செய்தே பரமபதம் தங்கள் சிறுமுறிப்படி செல்லும்படி ஆள்வர்கள்: அங்கே போனால் 'ஆண்மின்கள் வானகம் ஆழியான் தமர்.' என்கையன்றிக்கே இங்கேயிருக்கச்செய்தே தாங்களிட்ட வழக்காகப்பெறுவர்." என்பது நம்பிள்ளையீடு.

நஞ்சீயர் பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்தபின்பு நெடுங்காலம் பட்டர் பாடே அர்த்த விசேஷங்கள் கேட்டு இன்புறவேணுமென்று இருந்தார்; இருக்கையில் பட்டர் திருநாட்டுக்கெழுந்தருள நேர்ந்துவிட்டது; இந்த வருத்தத்தினால் நஞ்சீயர் "வையம்மன்னி வீற்றிருந்து" என்ற இவ்விடத்தை அருளிச்செய்யும் போது உருத்தோறும் வெதுநீர்வேதப்படுவராம்.

பட்டர் இருபத்தெட்டு (அல்லது 32) பிராயத்திலே திருநாட்டுக்கெழுந்தருளினாரென்று சிலர் கூறுவதுண்டு. இதற்குப் போதுமான பிரமாணம் கிடைத்திலது, ஆராய்ந்து பார்க்குமளவில்; பட்டர் ஐம்பது ஐம்பத்தைந்து பிராயம் எழுந்தருளியிருந்தார் என்று சொல்வதற்குச் சான்றுகள் உள்ளன. நூற்றிருபது திருநக்ஷத்திரம் எழுந்தருளியிருந்த எம்பெருமானாரை நோக்குமிடத்து பட்டர் எழுந்தருளியிருந்தது மிகவும் ஸ்வல்பகாலம் என்று சொல்லலாம்படியுள்ளது. (கக)

மூன்றாந் திருவாய்மொழியுரை முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத் தாத்பர்ய ரத்நாவளி.

[illegible]

1. சேதோகந்தாநுலேப:. நின்பூவைவீயா மேனிக்குப் பூசுஞ்சாந்து என்னெஞ்சமே. ஆழ்வாருடைய திருவுள்ளத்தைப் பூசுஞ்சாந்தாக வுடையனாய்.

2. ஸ்துதிவசநக்ருத ஸ்ரக்பட: அஞ்ஜல்யுபாத்தாலங்கார: புனையுங்கண்ணியெனதுடைய வாசகஞ்செய்மாலையே வன் பட்டாடையுமஃதே, தேசமான வணிகலனும் என்கைகூப்புச்செய்கையே. ஆழ்வார் பணித்த துதிமொழிகளையே மாலையாகவும் பீதாம்பரமாகவுங் கொண்டவனாய்; ஆழ்வாருடைய அஞ்ஜலியையே ஆத்மபூஷணங்களாகக் கொண்டவனாய்.

3. ப்ராணவாஸீ. உன் ஆகமுற்றுமகத்தடக்கி. ஆழ்வாருடைய அந்தரங்கத்திலே வஸிப்பவனுமாய்.

4, 5. சேதநேந கலிதவரசிரோபூஷண: * பூந்தண்மாலை நெடுமுடிக்குப் புனையுங்கண்ணியெனதுயிரே. * ஆழ்வாருடைய உயிரைத்தனக்கு சிரோபூஷணச்ரேஷ்டமான திருமாலையாக வுடையனுமாய் * கண்ணியெனதுயிர் காதல் கனகச்சோதிமுடிமுதலா, எண்ணில் பல்கலன்களும் ஏலுமாடையுமஃதே* என்ற ஐந்தாம் பாசுரத்தின் தாற்பரியமும் சொல்லிற்றாயிற்று.

6. சீர்ஷ்ணா ஸத்பாதபீட: கோலமாமென் சென்னிக்கு உன்கமலமன்ன குரைகழலே. * ஆழ்வாருடைய திருமுடியைத் தனது திருவடிகட்குப்பாதபீடமாகவுடையனுமாய். (சீர்ஷ்ணா என்ற த்ருதீயை * [illegible] இத்யாதிகளிற்போல [illegible] த்ருதீயையென்று அறிக.)

7. ஆத்மரூபே ஸ்வதநுஸதநதாம் விதந்வந். * உன்னுரைகொள் சோதித் திருவுருவம் என்னதாவிமேலதே. * ஆழ்வாருடைய ஆவியைத் தன்னுடைய திவ்யவிக்ரஹத்திற்கு இருப்பிடமாகவுடையனுமாய்.

8, 9, 10. அந்யோந்யாத்மத்வயோகாத்ப்ரபு:. * உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும். * ஆழ்வாருடைய ஆத்மாத்மீயங்களும் தன்னுடைய ஆத்மாத்மீயங்களும் அந்யோந்யம் இட்ட வழக்காம்படி நிற்குமவனுமாய் (ப்ரபு:) * புரைப்பிலாத பரம்பரனே * தன்னுடைய ஸர்வேச்வரத்வத்தில் புரையில்லாதபடியிருப்பவனுமாய். (ப்ரபு:) * யானுமெம்பிரானையே யேத்தினேன் * என்றவிடத்தில் எம்பிரானென்ற சொல்லில் நோக்கு.

ஆக இப்படிப்பட்ட எம்பெருமான், (தேந) அவ்வாழ்வாரால், (மித:ச்லிஷ்டபாவ: அகணி.) அந்யோந்யம் கருத்து ஒத்திருக்கையாகிற ப்ரணயித்வகுணமுடையனாகப் பேசப்பட்டான்.

தூப்புல்பிள்ளை திருவடிகளே சரணம்.

த்ரமிடோபநிஷத் ஸங்கதி.

ஸ்ரீ தத்வம் ஹரிரஶேஷ தயாஸ்ஸதா
தைதநபோவந நைஜஸங்கல்ப்ய தக்ஷ்யாஸி:|
ஸ்வக்ஷநவேஷவஸவ விபல்ஸ்ஸோஸ்
ஸம்ஸ்லிஷ்ட வாநிஷ ஸவாவஶநிஸ்த்ருதீயே||

(கருத்து) கீழ்த்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குச்சென்ற தன்மையை நோக்கி மிகவும் திருவுள்ளமுகந்த எம்பெருமான் இவ்வாழ்வாருடைய மனமொழி மெய்களின் வ்ருத்திகளையே புனையுங்கண்ணி பூசுஞ்சாந்து முதலிய ஸகலவித போக்யவஸ்துக்களாகக் கொண்டவனுய்க் கலந்து பரிமாறினுனென்பது மூன்றுந் திருவாய்மொழியிலருளிச் செய்யப்பட்டதென்கை.

ஜீயர் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கோவானவீசன் குறையெல்லாந்தீரவே
ஓவாதகாலத் துவாதிதனை—மேவிக்
சழித்தடையக்காட்டிக் கலந்தகுணமாறன்
வழுத்துதலால் வாழ்ந்ததிந்த மண்.

கோ ஆன ஈசன்	ஸர்வ சேஷியான எம்பெருமான்	அடைய	(கீழ் அபேக்ஷித்த அபதானங்களை) யெல்லாம்
குறை எல்லாம் தீர	எல்லாக் குறைகளும் தீரும்படி	காட்டி	ஸேவைஸாதிப்பித்து
ஓவாத காலத்து உவாதி தனை	விச்சேதமின்றி நடந்து செல்லுகிற காலத்தின் உபாதியை	கலந்த குணம்	தம்மோடு கலந்த குணத்தை
		மாறன்	நம்மாழ்வார்
		வழுத்துதலால்	துதித்ததனுல்
மேவி கழித்து	தம்மோடு சேர்ந்து கழித்து	இந்த மண்	இவ்வுலகம்
		வாழ்ந்தது	ஸத்தை பெற்றது.

கீழ்த்திருவாய்மொழியில் $தேசகால விப்ரக்ருஷ்டங்களான தன்படிகளை அநுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்ட ஆழ்வார்க்கு, காலசக்கரத்தானுகையாலே காலோபாதியைக் கழித்து நிகழ்காலம்போலே ஆக்கிக்கொடுத்து, இவர் தம்முடைய ஸத்தையே தனக்கு எல்லாமாம்படி யிருக்கிற தன் ப்ரணயித்வ குணத்தையும் அநுபவிப்பிக்கவே எல்லாம் பெற்றூராய் இந்த ப்ரணயித்வகுணத்தைப் பாராட்டிக் கூறினவிதனுல் இம்மண்ணுலகம் உய்வுபெற்றதென்றபடி.

காலோபாதியைக் கழிப்பதாவது—இறந்த காலத்தில் கழிந்துபோனவற்றையும் தத்காலத்திற்போலே ஸாக்ஷாத்கரிக்கும்படியாகச் செய்துவைக்கை.

"கலந்த குணமாறன்" என்றவிடத்து, குணமென்பதை மாறனுக்கு விசேஷணமாக்கி, சிறந்த குணசாலியான நம்மாழ்வார் என்று பொருள் கொண்டு கலந்த மாறனை வழுத்துதலால் இந்த மண் வாழ்ந்தது என்று உரைப்பாருமுளர். வாழ்ந்தது—வாழும் என்று எதிர்காலப்பொருள் கொள்ளவும் தகுதியுண்டு; விரைவுபற்றிய வழுவமைதி. (௩௩)

ஜீயர் திருவடிகளே சரணம்.

$தேசகாலவிப்ரக்ருஷ்டங்களான—எவ்விடத்திலோ என்றைக்கோ கடந்துபோன என்றபடி.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருவாய்மொழி—நான்காம்பத்து
நான்காந் திருவாய்மொழி—மண்ணையிருந்துதுழாவி.

உரையவதாரிகை.—ஆழ்வாருடைய பரமவைஷ்ணவத்வத்தை வெளியிடுவதாயிற்று இத்திருவாய்மொழி. எம்பெருமானுடைய ஸம்பந்தம்பெற்ற பொருள்களையும் எம்பெருமானுக்குப் போலியான பொருள்களையுங்கண்டு அப்பெருமான்றன்னையே கண்டதாகக்கொண்டு களிக்கையே பரமவைஷ்ணவத்வமாகும். அந்த நிலைமையே ஆழ்வார்க்கு இத்திருவாய்மொழியில் உண்டாயது.

கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமானுடைய ப்ரணயித்வகுணத்தைப் பேசிப் பரமானந்தம் பொலிய நின்றூராழ்வார்; அந்த நிலைமையைக்கண்ட எம்பெருமான் அந்த ரஸத்தை அரையாறுபடுத்தி ஸாத்மிப்பிக்கைக்காக அந்த ஸம்ச்லேஷத்தைச் சிறிது குறைத்து நின்றூன்; அதனுல் ஆழ்வார்க்கு ஆற்றாமை மீதூர்ந்தது. பணமுடிப்பைப் போக்கடித்தானெருவன் அத்தோடு போலியான முடிப்புகளெல்லாவற்றையும் அவிழ்த்தவிழ்த்துப் பார்க்குமாபோலே அவனேடொத்த பதார்த்தங்களையும் அவனேடு ஸம்பந்தமுள்ள பதார்த்தங்களையுமெல்லாம் அவனுகக்கொண்டு ப்ரமித்துக் கிட்டிப் பார்த்துப் பிச்சேறுகிறபடியாய்ச் செல்லுகிறது இத்திருவாய்மொழி.

பெருமாள் பஞ்சவடியில் பிராட்டியைப் பிரிந்தபோது "ஸ்லிஷ்டபுஷ்பஸ்தபை தவைஹாஸ ஸ்லிஷ்டஹஸ்ரதைஸாகாஹாதி காஷ்டாந்வேஷண தத்பர: க்வசிதுத்ப்ரமதே வேகாத் க்வசித் விப்ரமதே பலாத். க்வசிந் மத்த இவாபாதி காந்தாந்வேஷண தத்பர:—" என்று வால்மீகி கூறினபடியே பட்டபாடுகளெல்லாம் இப்போது ஆழ்வார் படுகிறூராயிற்று.

நம்பிள்ளையீடு;—"பிராட்டியைப் பிரிந்த வனந்தரம் ஆற்றாமையாலே மேல்நோக்கிப் பார்த்து விலங்க ஸஞ்சரிப்பது, அதுதானும் மாட்டாதொழிவது, ஒரு வ்ருக்ஷத்தில் நின்றும் வ்ருக்ஷாந்தரத்திலே சென்று கிட்டுவது, மைதிலியைக் கண்டிகோளோவென்று கேட்பது, ஆணாறு பெண்ணாறுக ளொன்றின்றிக்கே தேடுவதாய் அவர் பட்டாப்போலே இவளும் அப்படியே படுகிறுளிப்போது. இப்படி நோவுபடுகிறவிவள் தசையை அநுஸந்தித்த திருத்தாயார், இவள் படுகிற பாடுகளையும் இவள் சொல்லுகிற வார்த்தைகளையுஞ் சொல்லி, இதுகண்டு தான்

பொறுக்கமாட்டாமே நோவுபடுகிறபடியுஞ் சொல்லி இவள் கை வாங்குமளவாக அவன வந்து முகங்காட்டி ஆச்வஸிப்பிக்கத் தரித்ததாய்த் தலைக்கட்டுகிறது இத்திருவாய்மொழி."

மண்ணையிருந்துதுழாவி வாமனன்மண்ணிதுவென்னும் *
விண்ணைத்தொழுதவன்மேவு வைகுந்தமென்றுகைகாட்டும் *
கண்ணையுண்ணீர்மல்கநின்று கடல்வண்ணனென்னுமன்னே! * என்
பெண்ணைப்பெருமயல்செய்தாற்கு என்செய்கேன்? பெய்வளையீரே!.

பெய் வளையீர்	கையில் வளையணிந்த மாதர்காள்!,	உள் நீர்	அகவாயில் கண்ணீரானது
மண்ணை இருந்து துழாவி	(என் மகளானவள்) பூமியைத் துழாவி	கண்ணை மல்க நின்று	கண்ணையும் விஞ்சிப் புறப்படும்படி நின்று
இது வாமனன் மண் என்னும்	'இது (எம்பெருமான்) வாமனனாய் அளந்து கொண்ட மண்' என்று கூறுகின்றாள்;	கடல் வண்ணன் என்னும்	கடல்போலும் நிறத்தையுடையவன் என்று சொல்லுகின்றாள்;
விண்ணை தொழுது	ஆகாசத்தை (நோக்கி) அஞ்சலி பண்ணி	அன்னே	அம்மே!
அவன் மேவு வைகுந்தம் என்று	'அவ்வெம்பெருமான் நித்யவாஸம் பண்ணுகிற ஸ்ரீவைகுண்டம்' என்று சொல்லி	என் பெண்ணை பெரு மயல் செய் தார்க்கு	என்னுடைய மகளை இப்படி அதிசயமான பிச்சேறும்படி பண்ணினவருக்கு
கை காட்டும்	தன் கைகளாலே (பிறர்க்கும்) காட்டா நின்றாள்;	என் செய்கேன்	யாது செய்வேன்?.

* * * [மண்ணையிருந்து] பராங்குசநாயகியின் திருத்தாயார் மகளுடைய செய்தியை வினவ வந்தவர்களுக்கு அறிவியா நின்றுகொண்டு 'இப்படி யிவளை எம்பெருமான் பிச்சேற்றினனே! இதற்கு நான் என் செய்வே'னென்கிறாள்.

'பண்டு எம்பெருமான் இவ்வுலகத்தை அளந்தருளினபோது அவன் திருவடிகளோடே ஸம்பந்தம் பெற்றது இந்த மண்' என்றுசொல்லி ஆழ்வார் போதுபோக்குகிறபடியை முதலடி தெரிவிக்கும். உலகத்தில் எல்லாரும் மண்ணை மண்ணாகவே நினைத்துக்கிடப்பர்கள்; ஆழ்வார் அங்ஙனன்றிக்கே அதுதன்னிலே ஒரு விசேஷ ப்ரதிபத்தி பண்ணுகிறபடி.

விச்வாமித்ரமுனிவன் யாகரக்ஷணார்த்தமாக ஸ்ரீராம லக்ஷ்மணர்களை அழைத்துச் செல்லாநிற்கையில், பெருமாள் ஒரு சோலையைக்கண்டு 'இதுஎன்ன?' என்றுகேட்க, முனிவன் "இஹ ராம மஹாபாஹோ—அயம் ஸித்தாச்ரமோ நாம" என்று தொடங்கிச் சொல்லிவந்து "ஏதாஸ்மிந் ஹதே தத்ரைவ ததா நிவஸாம்யஹம்—மயா து பக்த்யா தஸ்யைவ வாமநஸ்யோப புஜ்யதே." என்றான்; இது முன்பு ஸித்தாச்ரமமாய் ஸ்ரீவாமநமூர்த்தி

எழுந்தருளியிருந்த தேசமாயிற்று; அப்பெருமான் இவ்விடத்தைவிட்டு அகன்ற பின்பு அவன் பக்கல் பக்தியாலே விடமாட்டாமல் அம்மண்ணை மோந்து கொண்டு கிடக்கின்றேன்—என்பது விச்வாமித்ரன் சொன்ன வார்த்தையின் கருத்து. அபிநிவேசமுடையார்படி இதுவாயிற்று.

நிலத்திற்குக் குணம் மணமென்று சாஸ்த்ரஜ்ஞர்களின் கொள்கை; "மருவதீ வாயு:—கந்தவதீ ப்ருதிவீ" என்பர்கள்; எம்பெருமானுடைய நறுமணம் மிக்க திருவடியின் ஸம்பந்தம் பெற்றதனால்தான் மண்ணுக்கு மணமுண்டாயதுஎன்று பராங்குசநாயகியின் உபந்யாஸம் போலும்.

விண்ணைத்தொழுது அவன் மேவு வைகுந்தமென்று கைகாட்டும்—மண்ணைத்துழாவிப் பேசினபடி கீழே சொல்லிற்று; விண்ணைத்தொழுது பேசுகிறபடி இதில் சொல்லுகிறது. ஆகாசத்தை நோக்கித் தொழுது 'எம்பெருமான் நித்யவாஸம் பண்ணுகிற திருநாடு அதோ பாருங்கள்' என்றுசொல்லிக் கைகாட்டுகின்றாளென்கை.

இங்கே ஈட்டு ஸ்ரீஸூக்தி;—"ஆர்ஷ்டிஷேணனாச்ரமத்திலே நின்று பரமபதம் கண்டார்களிறே சிலர்." என்றுள்ளது. மஹாபாரதத்தில் வநபர்வத்தில் நூற்றறுபதாமத்யாயத்தில் ஆர்ஷ்டிஷேணனென்னும் ராஜர்ஷிக்கும் தருமபுத்திரர்க்கும் ஸம்வாதம் நடைபெறுகின்றது. அங்கு "ஜலபக்ஷா வாயுபக்ஷாச்ச— அப்பக்ஷா வாயுபக்ஷாச்ச" என்கிற பதினாறாவது சுலோகம் தொடங்கிச்சொல்லி வருகையில் இவ்விஷயம் காணத்தக்கது. "ஸ்வஸ்த்யாத்ரேய: ஸ்வர்கம் ஸௌர்யா வைஷ்ணவம் மதி: மஹர்ஷீணாம் தேவர்ஷீணாம் ப்ரகாசதே— அஸ்யாதிக்ரம்ய சிகரம் கைலாஸஸ்ய யுதிஷ்டிர, கதி: பரமஸித்தாநாம் தேவர்ஷீணாம் ப்ரகாசதே." என்கிற ச்லோகம் இங்கு விவக்ஷிதமாயிருக்கலாம் போல் தோன்றுகிறது.

[கண்ணையுள் இத்யாதி] ஹஸ்தசேஷ்டையாலே திருநாட்டைக் காட்டின வத்தனையொழிய, திருநாட்டில் அவனிருக்கிறபடியைக் காணப்பெறாமையாலே கண்ணீர்மல்க நின்று தன்னாற்றாமையாலே திருவடிவத்தை நினைத்துக் கடல்வண்ணனே யென்கின்றாள். கடல்போன்ற திருமேனியைக் காட்டியன்றோ என்னை இங்ஙனே வியாமோஹிக்கச் செய்தது என்று தெரிவித்தவாறு.

[என்பெண்ணை இத்யாதி.] இங்ஙனே என்மகளுக்கு லோகவிலக்ஷணமான வியாமோஹத்தை உண்டுபண்ணின மஹாநுபாவன் விஷயத்தில் நான் செய்யக்கூடியது யாது? அவரை இங்குவந்து சேரும்படி செய்யவல்லேனோ? அவர் வருமளவும் ஆறியிருக்கும்படி இவளுக்குச் சொல்லவல்லேனோ? ஒன்றும் மாட்டுகிறிலேன் என்று கருத்து. ... ... (க).

பெய்வளைக்கைகளைக்கூப்பிப் பிரான்கிடக்கும்கடலென்னும் *
செய்யதோர்ஞாயிற்றைக்காட்டிச் சிரீதரன்மூர்த்தியீதென்னும் *
நையும்கண்ணீர்மல்கநின்று நாரணனென்னுமன்னே! * என்
தெய்வவுருவிற்சிறுமான் செய்கின்றதொன்றறியேனே. (உ)

(என் மகளானவள்)

பெய் வளை கைகளை	(பலகாலும் கழன்று பிறகு) இடப்படாநின்கிற வளைகளையுடைய தனது கைகளை
கூப்பி	குவித்து அஞ்சலிபண்ணி
	(கடலைப் பார்த்து)
பிரான்	உபகார சீலனான எம்பெருமான்
கிடக்கும்	(எனக்கு முகங்காட்டப்) பள்ளிகொண்டிருக்கிற
கடல் என்னும்	கடல் (இது) என்று சொல்லுவாள்;
செய்யது ஓர் ஞாயிற்றை காட்டி	சிவந்த ஒளியில் ஒப்பற்றவனான சூரியனைச் சுட்டிக்காட்டி
சிரீதரன் மூர்த்தி ஈது என்னும்	'பெரிய பிராட்டியாரோடே கூடியுள்ள எம்பெருமானது வடிவு இது' என்று சொல்லுவாள்;
நையும்	(தான் அவனைக்கிட்டி அநுபவிக்கப்பெறாமையாலே) வாடுவாள்;
கண் நீர் மல்க நின்று	(அந்த வாட்டத்தினாலே) கண்ணீர் பெருக நின்று
நாரணன் என்னும்	'நாராயணன்' என்று வாய் வெருவுவாள்;
அன்னே	அம்மே!
என் தெய்வம் உருவில் சிறு மான்	என்னுடைய (நித்யஸூரிகள் வடிவுபோல) அப்ராக்ருதமான வடிவையுடையளாய் மான் போல இளையபருவத்தையுடையளான இவள்
செய்கின்றது ஒன்று அறியேன்	செய்கின்ற காரியங்கள் ஒன்றும் அறிகிலேன்

* * * [பெய்வளை.] எம்பெருமானோடு ஸம்பந்தமுடைய கடலையும் ஸூர்யனையுங்கண்டு பராங்குசநாயகி சொல்லுமவற்றைத் திருத்தாயார் கூறுகின்றார். திவ்யமான வடிவுபடைத்தவிவள் செய்வதொன்றும் எனக்கு இன்னதென்று தெரிகின்றதில்லை யென்கிறாள்.

பெய்வளைக் கைகளைக்கூப்பி—இப்போது ஆழ்வார்க்கு விச்லேஷதசையன்றோ செல்லுகின்றது; இப்பிரிவு நிலைமையில் கையில்வளைகள் கழன்றனவாகப் பேசுகையன்றோ முறைமை; பெய்வளைக் கைகளென்னலாமோ? என்று சங்கை தோன்றும்; இந்த சங்கையை நம்பிள்ளை திருவுள்ளத்திற்கொண்டு ஸமாதானமாக அருளிச்செய்கிறார்—"கடல்வண்ணன் என்றவாறே, கழன்றவளைகளெல்லாம் பூரித்தனகாணும்" என்று. இவ்விடத்தில் ஒரு சுலோகம் நினைக்கத்தக்கதுண்டு; அதாவது "யாதி யாதீதி யவெ வததி ஸஹாஸ க்ஷணெந தநுஹ்ருதி| ஜீதாநி வரவலயாநி கவராணிவநதைவ ஊலி காநி—யாமி ந யாமீதி தலே வததி புரஸ்தாத் க்ஷணேந தந்வங்க்யாः, களிதாநி புரோவலயாநி அபராணி புநஸ் ததைவ தளிதாநி." என்பதாம்

(இதன்கருத்து.) கையில் பலவளைகளை அணிந்துகொண்டிருந்த நாயகியோடு நாயகன் பேசிக்கொண்டிருக்கும்போது அவளைநோக்கி யாமி என்றான்; வெளியூருக்குப் போவதாக இருக்கிறேன் என்றபடி. இங்ஙனே பிரிவை ப்ரஸங்கித்தவாறே அக்காதலி பிரிவு வந்திட்டதாகவே கருதி அப்போதே மேனி மெலிந்து கை ஈர்க்குப்போலேயாகி வளைகள் சரிந்துவிழத் தொடங்கின; அந்நிலையைக்கண்ட காதலன் அவளுடைய பிரிவாற்றாமையைக் கண்டு நொந்து, தான் பிரிந்துசெல்வது தகாதென்று துணிந்து நயாமி என்றான்; இதை இரண்டு சொற்களாகக் கொண்டால் 'நான் பிரிந்து போவேனல்லேன்' என்று பொருளாகும்; ஒரே சொல்லாகக் கொண்டால் 'உன்னையும் உடனழைத்துக்கொண்டு போகிறேன்' என்று பொருளாகும். இங்கே ஏகப்ரயோகத்திலே இரண்டு பொருளும் விவக்ஷிதமாகலாம். காதலன் இங்ஙனே சொன்னதைக்கேட்ட காதலி அந்த க்ஷணத்திலேயே பிரிவாற்றாமைத்துயர் தொலையப்பெற்று உடல் பூரிக்கப்பெற்றதனால் முன்க்ஷணத்திலே கழன்றொழிந்த வளைகள்போக சேஷித்தவை (உடல் பூரிப்பாலே) படீலென்று வெடித்து விழுந்தொழிந்தனவாம். இந்த ரீதியில் விச்லேஷ தசையில் இருக்கின்ற பராங்குசநாயகிக்குக் கையில்வளை பெய்யப் பெற்றிருத்தல் கூடுமோ? என்று சங்கை; விச்லேஷதசையா யிருக்கச்செய்தேயும் (கீழ்ப்பாட்டில்) கடல்வண்ணனென்று தலைவனது திருநாமத்தை உச்சரிக்கப் பெற்ற உவப்பினால் சிலவளைகள் கையில் தங்கியிருந்தன வென்றதாயிற்று.

அஞ்ஜலி மாறாதே யிருந்தாள்; கடலோசைவந்து செவிப்பட்டது; கண்ணுக்கு இலக்காக வேண்டிய எம்பெருமான் காதுக்கு இலக்கானதாகக் கருதினாள்; கடலோசை வழியாய்க் கடலை நினைத்துக் கடல்வண்ணனான எம்பெருமானை நினைத்து, அப்பெருமான் பள்ளிகொண்டருளுங் கடலன்றோ இது! என்னா நின்றாள்.

பிரான் என்றது இராமபிரான் என்றபடியாய், அவன் ஒரு பிராட்டியைப் பெறுதற்காகக் கடற்கரையிலே தரைக்கிடை கிடந்தவாற்றை நினைத்துப் பிரான் கிடக்குங்கடல் என்றதாகவுங் கொள்ளலாம். கீழ்ப்பாட்டில் கடல்வண்ணனென்றதையும், இப்பாட்டில் பிரான் கிடக்குங்கடல் என்றதையும் சேரப்பிடித்து நோக்குமிடத்து, எம்பெருமானைக் கடல்தானாகவே ஆழ்வார் அத்யவஸித்திருக்கின்றவாறு தோன்றும். ஸ்ரீராமபிரான் விபீஷணாழ்வானுடைய வார்த்தையைக்கேட்டுக் கடலரசனை நோக்கிச் சரணாகதி பண்ணினாரென்பதை வெளியிட்ட வால்மீகிமுனிவரும் கம்பரும் ஸ்ரீராமபிரானையும் ஒரு கடலாகப் பேசினார்கள். "ஸமுத்ரம் ராகவோ ராஜா சயநம் பர்யகல்பயத்—அஞ்ஜலிம் ப்ராங்முகஃ க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததேஃ" என்பது வால்மீகிமுனிவரின் வாக்கு. இதில் ப்ரதி சிச்யே என்றதனால் அந்தக்கடலை நோக்கி மற்றொருகடல் எதிரே பள்ளிகொண்டது போலும் என்பதாகக் கருத்துத் தொனிக்கின்றதென்று மஹான்கள் வியாக்கியானம் செய்தார்கள். கம்பரும் *வருணனை வழிவேண்டு

படலத்தில் "கருமையங் கடல் கிடந்தனன் கருக்கடல் நோக்கி" என்றார். *நீராய்
நிலனாயில் மூன்றாம்பாட்டின் ஈட்டிலும் "ஒருகடல் ஒரு கடலோடே ஸ்பர்த்
தித்துக் கிடந்தாப் போலே யிருக்கை" என்றருளிச் செய்யப்பட்டது. இங்ஙனே
பலரும் பேசலாம்படி எம்பெருமானுக்கும் கடலுக்குமுள்ள ஒற்றுமை நயத்தைப்
பலபடியாக இங்கு விவரிக்க விரும்புகின்றோங் காண்மின் ;—

1. பெரிய திருமொழியில் (2-8-5) "நின்ற மலைகளும் மாமணியும் மலர்
மேல் மங்கையும் சங்கமும் தங்குகின்ற, அலைகடல் போன்றிவர்" என்ற பாசுரத்
தில் திருமங்கையாழ்வார்தாமே பகவானுக்கு ஸமுத்ர ஸாம்யத்தை ஒருவாறு
அருளிச்செய்தார். கடலானது மைநாகம் முதலிய மலைகளையுடையது; எம்பெரு
மான் *ஈரிரண்டு மால் வரைத் தோள் செங்கண் திருமுகத்துச் செல்வத்திருமால்*
என்கிறபடியே மலைபோன்ற திருத்தோள்களையுடையவன். "நகுகதிர் வழங்கு
தகடுபடு செம்பொன் நவமணி குயின்ற தொடியணியணிந்த ககனவிலிடு நீல
வெற்போத்திருந்தன" என்றார் பிள்ளைப்பெருமாளையங்காரும். கடல் சிறந்த நவ
மணிகளையுமுடையது; எம்பெருமான் *குருமாமணிப்பூண் *என்கிற கௌஸ்துப
மணியையும் *செங்கமலக்கழலில் சிற்றிதழ்போல் விரலில் சேர்திகழாழிகளுங்
கிண்கிணியும் அரையில் தங்கிய பொன்வடமும் தாள நன் மாதுளையின் பூவொடு
பொன்மணியும் மோதிரமுங் கிறியும் மங்கல வைம்படையுந் தோள்வளையுங்
குழையும் மகரமும் வாளிகளும் சுட்டியும்" என்னும்படியான திவ்யாபரண
மணிகளையுமுடையவன். கடல் லக்ஷ்மீப்ரஸூதிக்ருஹ மாகையாலே பெரிய
பிராட்டியார்க்கு உறைவிடம், எம்பெருமான் *அகலகில்லேனிறையு மென்று
அலர்மேல் மங்கையுறைமார்பன். கடல் சங்குதங்குமிடம், எம்பெருமானும்
*வெள்ளைச்சுரிசங்கு ஏந்துமவன். மத்யமாநசல பேநிலஸிந்து...." இத்யாதி வரத
ராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும், "ஹாரஸ்பாரிதபேநம் அம்சுஹரீமாலர்த்தி முக்தா
பலச்ரேணீ சீகரதுர்த்திநம் தத இதோ வ்யாகீர்ண ரத்நோத்கரம், ஆவி: கௌஸ்துப
லக்ஷ்மி ரங்கவஸதேர் நிஸ்ஸீம பூமாத்புதம் வக்ஷோ மந்தரமத்யமாந ஜலதிச்லாகம்
விலோகேமஹி" என்கிற ஸ்ரீரங்க ராஜஸ்தவ ஸ்ரீஸூக்தியும் இங்கு ஸ்மரிக்கத்
தகும்.

2. கடல் முன்னீர் என்று பெயர் பெற்றிருக்கும், எல்லாவற்றுக்கும்
முன்னே ஏற்பட்ட நீர் என்பது பொருள். "அப ஏவ ஸஸர்ஜாதௌ—அப ஏவ
ஸஸர்ஜ ஆதௌ" என்று மஹர்ஷிகளும் "நன்மைப் புனல் பண்ணி" என்று ஆழ்
வார்களும் கூறினது காண்க. இங்ஙனே கடல் முதன்மை பெற்றிருப்பது போல
எம்பெருமானும் "முனைவன் மூவுலகாளியப்பன்" என்னும்படியே ஆதிபகவனா
யிருப்பன்.

3. கடல் முன்னீர் என்பதல்லாமல் முந்நீர் எனப்படுவது முண்டு
[நகரத்தில் வாசி காண்க.] ஆற்றுநீர் ஊற்றுநீர் மழைநீர் எனப்படுகிற மூன்று
வகைப்பட்ட நீரையுடையது கடல் என்றபடி. எம்பெருமானும் நீர்போன்ற

கருணாரஸம் மூன்றுவகையாக இருக்கப்பெற்றவன்; (1) இயற்கையான இன்ன
ருள், (2) பிறர்படுந் துயரத்தைக்கண்டு தோன்றுகின்ற அருள், (3) பிராட்டியின்
புருஷகாரத்தாலே தோற்றுவிக்கப்பட்ட அருள் என மூவகைப்படும் பகவானது
கருணாரஸம்.

4. கடல் சிறுமீன் முதலாகத் திமிங்கிலம் வரையிலும், கிளிஞ்சல் முத
லாக மணி மாணிக்கம் வரையிலும் அதம உத்தம விபாகமில்லாமல் அனைத்துக்
கும் தன்பக்கல் இடங்கொடுத்திருக்கும். எம்பெருமானும் "சிவனொடு பிரமன்
வண் திருமடந்தை சேர் திருவாகம்" "ஏறாளுமிறையோனுந் திசைமுகனுந் திரும
களும், கூறாளுந் தனியுடம்பன்" "பச்யாமி தேவாம்ஸ் தவ தேவ தேஹே—"பச்யாமி
தேவாந் தவதேவ தேஹே" இத்யாதிப்படியே ஸர்வாபாச்ரய மாயிருப்பன்.

5. கடல் தேவர்களுக்குச் சாவாமருந்தான அமுதத்தைச் சுரந்தளித்
தது. எம்பெருமானும் "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம்"
"தன்னைப் பெற்றேற்குத் தன்வாயமுதம் தந்து என்னைத் தளிர்ப்பிக்கின்றான்"
என்னும்படியே பேரன்புடையார்க்குச் சாவா மருந்தான வாயமுதத்தை யளிக்கு
மவன்.

6. கடல் அளவிடமுடியாத ஆழமுடையது; *ஸமுத்ர இவ காம்பீர்யே*
என்கிறபடியே எம்பெருமானது கம்பீரத் தன்மையும் பாசுரமிட்டுப்பேச வொண்
ணாதது. *கொள்ள மாளாவின்ப வெள்ளமாகையாலே இதிலே யிழிவார்க்கு
உள்ளாழம் காண்பரிது.

7. கடல் தன்பக்கலுள்ளதை மேகங்களுக்குக் கொடுப்பதுஞ் செய்யும் ;
மேகம் பெய்யும் நீரைத்தான் வாங்கிக் கொள்வதுஞ் செய்யும். எம்பெருமானும்
"அர்த்திதார்த்த பரிதாந தீக்ஷிதம்" "ஸகல பலப்ரதோ ஹி விஷ்ணு:" என்கிற
படியே கொடுக்கவும் வல்லன்; "கரோமி யத் யத் ஸகலம் பரஸ்மை நாராயணா
யேதி ஸமர்ப்பயாமி" என்று கொடுப்பார் கொடுப்பவற்றைக் கொள்ளவும்வல்லன்.

8. கடல், மழைநீர் தன்னிடத்து விழப்பெற்றாலும் அதனால் ஒரு அதி
சயமும் உண்டாகப் பெறாது; "வர்ஷபிந்தோரிவ அப்தௌ ஸம்பந்தாத் ஸ்வாத்
மலாபோ ந து கபளநத:" என்கிறபடியே பெய்யும் முகிலுக்கு ஆத்மலாபமே
யத்தனை. எம்பெருமானுக்கு நாம் எவ்வளவு ஸமர்ப்பித்தாலும் அதனால் நாம்
க்ருதார்த்தர்களாவது தவிர பகவானுக்குப் புதிதாகச் செல்வ நிறைவு ஒன்று
மில்லை.

9. கடல் நீர் நம் போல்வார் வாயில் புகமாட்டாது கசக்கும்; ஆனாலும்
"ஆசாந்தவிந்தோ : கும்பஸம்பவோ :" என்கிறபடியே குறு முனிவனுக்கு உண
வாயிற்று. எம்பெருமானும் "தோன்றல் வாளரக்கன் கெடத் தோன்றிய நஞ்
சினை" என்கிறபடியே நம்போல்வாரான ஆஸுரப்ரக்ருதிகளுக்கு விஷமாயிருந்

தாலும் சுவையறிவார்க்கு "அமுதிலுமாற்ற வினியன்" "எனக்குத் தேனே பாலே கன்னலே யமுதே திருமாலிருஞ்சோலைக் கோனேயாகி" என்னும்படி பரம போக்யனவன்.

10. கடல் அஞ்சினார்க்குப் புகலிட மாயிருக்கும்; இந்திரனிடத்து அஞ்சின மைநாககிரி முதலிய வற்றிற்குப் புகலிடமாயிருந்ததே. எம்பெருமானுக்கு இத்தன்மை ஸ்வபாவஸித்தம். "அஞ்சினேற்கு அஞ்ச லென்று காவி போல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றினரே" "ஆர்த்தத்ராண பராயணஸ் ஸ பகவாந் நாராயணோ மே கதி:" இத்யாதி.

11. கடல்நீர் மாமுகிலின் வாய்வழியாக வந்தாலன்றி ஆர்க்கும் உபஜீவிக்க வொண்ணாது; எம்பெருமானும் ஆழ்வாராசார்யர்களின் திருவாய் வழியாக வந்தாலன்றி உபஜீவிக்கலாகான். (இவ்விடத்தில் *லைக்ஷமீநாதாக்யஸிந்தௌ சடரிபு ஜலத: ப்ராப்ய காருண்ய நீரம் நாதாத்ரௌ அப்யஷிஞ்சத்" என்கிற ச்லோகத்தின் விரிவான பொருளும் "மேகம் பருகின ஸமுத்ராம்பு போலே நாற்கடற் சொல் இவர் வாயனவாய்த் திருந்தினவாறே ஸர்வதா ஸாவோப ஜீவ்யமாமே" என்கிற ஆசார்யஹ்ருதய திவ்யஸூக்தியின் சீரிய பொருளும் வெகு அழகாக உபந்யஸிக்கப்படவேண்டியவை.

12. கடல் பெரும்பாலும் குளிர்ச்சி மிக்கிருக்கச்செய்தேயும் ஒரு புறத்தில் பாடபாக்நி பொங்கிநிற்கும். எம்பெருமானும் தண்ணளியே வடிவாயிருக்கச் செய்தேயும் "நீரிலே நெருப்புக் கிளருமா போலே குளிர்ந்த திருவுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறக்க" வெவ்வியனாயிருப்பது முண்டிறே.

13. கடல் சந்திரனைக்கண்டால் பொங்கிக்கிளரும்; எம்பெருமானும் ஞானிகளைக்கண்டால் "தோள்களாயிரத்தாய் முடிகளாயிரத்தாய் துணைமலர்க் கண்களாயிரத்தாய், தாள்களாயிரத்தாய்" என்னும்படியே சத சாகமாகப் பணைப்பன்.

14. நாமெல்லாரும் கடலின் கரையிலே நிற்கவேண்டுமே யல்லது உள்ளே புக முடியாது, சிலவர்களே உட்புகுந்து ரத்னங்களைத் திரட்டிக் கொணர்வர்கள். அது போலே பகவத் விஷயத்திலே நாமெல்லாம் மேலெழ நிற்க, சில மஹான்களே ஆழ அவகாஹித்து வேதார்த்த ரத்ன நிதிகளை வாரிக் கொணர்ந்து கொடுப்பார்கள்.

15. கடல் விஷத்தையும் தந்தது, அமுதத்தையுமளித்தது. எம்பெருமானும் *பயக்ருத் பயநாசந: *என்கிறபடியே பயத்தையும் விளைவிப்பான், பயநாசமும் பண்ணித்தருவான். "நல்குரவுஞ் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய், வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமுமாய்" என்றார் நம்மாழ்வாரும். "பவமோக்ஷண யோஸ் த்வயைவ ஜந்து: க்ரியதே ரங்கநிதே!" என்றார் பட்டரும்.

16. கடல் எத்தனை தடவை பார்க்கப்பட்டாலும் த்ருப்தி தரமாட்டாது காணுந்தோறும் அபூர்வதர்சநமாகவே யிருக்கும். எம்பெருமான்படியு மப்படியே; "எப்பொழுதும் நாள் திங்கள் ஆண்டூழியூழி தொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னாரா வமுதமே" என்றார் நம்மாழ்வார்.

17. கடலுக்கு ஒரு பக்கத்தில் வரவுகளும் ஒரு பக்கத்தில் செலவுகளுமாயிருக்கும், [பல நதிகள் வந்து சேர்வது வரவு; மேகம் நீர் முகந்து கொண்டு போவது செலவு.] எம்பெருமானுக்கும் அர்ச்சாவதாரங்களில் இங்ஙனேயாயிருக்கும். திருவேங்கடமுடையான் ஸந்நிதி போன்ற ஆலயங்களில் உண்டியில் வரவுமுண்டு; பலவகைச் செலவுமுண்டு.

18. கடல்வழியே போவார்க்குப் பெருஞ் செல்வம் கிடைக்கும்; "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்றார்கள்; அநுபவத்திலும் இது காணாநின்றோம். இவ்வண்ணமே எம்பெருமான் வழியே போவார்க்கு மஹார்த்தங்கள் கிடைக்கும், "நின்னையே தான் வேண்டி நீள் செல்வம் வேண்டாதான் றன்னையே தான் வேண்டுஞ் செல்வம்" என்றார் குலசேகரப்பெருமாள்.

19. [illegible]—"அப்திர் லங்கித ஏவ வாநரபடை: கிந்து அஸ்ய கம்பீரதாம் ஆபாதாள நிமக்ந பீவரதநுர் ஜாநாதி மந்தாசல:" (முராரி) என்கிறபடியே வாநர வீரர்கள் கடலைக்கடந்து விட்டாலும் அவர்களுக்கு உள்ளாழம் தெரியாது, அடிவரையில் அழுந்தின மந்தர கிரிக்கே அந்த ஆழம் தெரியும். அதுபோலவே எம்பெருமான் விஷயத்தில் நாமெல்லோரும் கவிகள் இயற்றித் துதி செய்துவிட்டாலும் அவன்படிகளை நாம் சிறிதுமறியோம், ஆழ்வார்கள் என்று திருநாமம் பெற்று அவ்விஷயத்தில் ஆழ மூழ்கியிருக்கும் மஹான்களே ஆழமறிவார்கள். "பாலிற் கிடந்ததுவும் பண்டரங்கமேயதுவும், ஆலில் துயின்றதுவுமா றறிவார்—ஞாலத்தொரு பொருளைவானவர் தம் மெய்ப்பொருளை, அப்பிலரு பொருளை யானறிந்தவாறு." [திருமழிசைப்பிரான்.]

20. கடல் கலங்காது, கலங்கினாலும் ஒரு நொடிப் பொழுதில்தானே தெளிவு பெறும். தண்ணளியே வடிவெடுத்த எம்பெருமானும் சீற்றங் கொள்ள மாட்டான், ஔபாதிகமாகச் சீறினாலும் அடுத்த க்ஷணத்திலே அநுக்ரஹம் பொங்கி நிற்பன்: "[illegible]—மா வாலிபதமந்வகா." என்னும்படி ஸுக்ரீவ மஹாராஜர் பக்கலிலும் "ஸாகரம் சோஷயிஷ்யாமி" என்னும்படி ஸமுத்ர ராஜன் பக்கலிலும் அளவு கடந்து சீறிச்சிவந்த இராமபிரான் அடுத்த க்ஷணத்திலே அருள்பொலிய நின்றமை காண்க. காகாஸுரன் போல்வார் திறத்திலுமிது காணத்தகும்.

21. கடல் அபரிச்சேத்யமாயினும் குறு முனிவன் கையிலே ஆசமநத்திற்குப் போதும்படி அடங்கி நின்றது. "யதோ வாசோ நிவர்த்தந்தே. அப்

ராப்ய மநஸா ஸஹ'' என்னும்படி வேத வேதாந்தங்களுக்கும் அபரிச்சேத்ய மான பகவத் விஷயம் ஆழ்வார்களுக்குப் பரிச்சேத்யமாயிற்று: ''நண்ணுவசுரர் நலிவெய்த நல்லவமரர் பொலிவெய்த, எண்ணுதனக வெண்ணும் நன்முனிவர் இன்பந் தலைச் சிறப்பப், பண்ணார் பாடலின் கவிகள் யானாய்த் தன்னைத்தான் பாடி.'' (10-7-5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் இரண்டாமடிக்கு நம்பிள்ளையீடு ஸேவிக்க நன்முனிவர்கள் எண்ணுதனக வெண்ணும்படியாக ஆழ்வார் திருவாய்மொழி பாடினாராம். எண்ணுதனக வெண்ணுதலாவது என்ன? என்னில், ''எம்பெருமானுடைய ஸ்வரூப ரூப குண விபூதிகளை விரிவாக வும் அழகாகவும் எடுத்துரைக்க ஒரு புஸ்தகமும் அவதரிக்கவில்லையே, ஆனந்த குண மொன்றைப் பேசப்புகுந்த உபநிஷத்தும் ''யதோ வாசோ நிவர்த்தந்தே' என்னும்படி மீண்டதே; அப்படியல்லாமல் பகவத் விபூதிகளை விரிவாகப் பேச ஒரு க்ரந்தம் அவதரிக்க வேணும்'' என்று முனிவர்கள் (திருவாய்மொழி அவதரிப்பதற்கு முன்னே) எண்ணினார்களாம், அப்படிப்பட்டவர்களை திருவாய்மொழி அவதரித்த பின்பு என்ன எண்ணினார்களென்றால், ஐயோ! எம்பெருமானுக்கு இன்னஞ் சில குணங்களும் இன்னஞ் சில விபூதிகளும் இன்னஞ் சில அவதாரங்களும் இன்னஞ் சில சேஷ்டிதங்களும் இல்லாமற் போயினவே! என வருந்தினார்களாம். இதன் கருத்தென்ன? எம்பெருமானுக்குள்ள ஸ்வரூப ரூப குண விபூதி அவதார சேஷ்டிதங்களடங்கலும் ஆழ்வாரருளிச் செயலில் அடங்கி விட்டன வென்பதாம்

22. கடலானது புல் துரும்பு முதலானவற்றை அலைமேலலை மோதி வெளியிலே தள்ளிவிடும், மகரம் முதலானவற்றை அங்ஙனம் தள்ளாது உள்ளே கொண்டிருக்கும். இதற்குக் காரணமென்ன? ஸம்பந்தஜ்ஞான மில்லாதாரைத் தள்ளிவிடும், ஸம்பந்தஜ்ஞான முடையாரை அங்கீகரித்திருக்கும். எம்பெருமான் படியுமிதுவேயாம், ''அடங்கெழில் சம்பத்து அடங்கக் கண்டு, ஈசனடங்கெழிலஃதென்றடங்குகவுள்ளே:'' (1-2-5) என்ற திருவாய்மொழிப் பாசுரத்தின் நம்பிள்ளை யீட்டில் விளங்கவுள்ள விஷயமிது.

23. கடல் கடக்க அரிதாயினும் நாவாயினால் எளிதாகக் கடக்கலாகும். ''வொரம்ஹொஜெ வஜய ஹவதொ ஹகீ நாவம வுயஹு—''பாதாம்போஜே வரத! பவந்தா பக்தி நாவம் ப்ரயச்ச'' (முகுந்தமாலை) என்கிறபடியே பக்தியாகிற நாவாயைப் பெற்றால் எம்பெருமானாகிற கடலையும் எளிதாகக் கடந்து விடலாம். *பத்துடையடியவர்க்கு எளியவன்*

24. கடலருகேயிருந்தாலும் விடாய் தீர்த்துக்கொள்ள வேறொரு நீர்நிலை தேட்டமாகும். சாஸ்த்ரங்களால் எம்பெருமானை எவ்வளவு அநுபவித்தாலும் அர்ச்சையிலிழிந்தாலன்றி ஆர்த்தி சாந்தி யில்லையிறே.

25. எவ்வளவு காரிய நிர்ப்பந்தங்களிருந்தாலும் பெருஞ் செல்வர்கள் சிறிது போதாவது கடற்கரை சாராதிரார்கள்; அது போலவே பல காரியங்களை

யும் சுருக்கிக்கொண்டு தினப்படி ஒரு நாழிகைப் பொழுதாவது பகவத் கதையில் அந்வயியாதிரார்கள்.

கடலில் அலை ஓடாது. எம்பெருமானுக்கும் *அலைப்புரிந்த நெடுந் தடக்கை ஓயாது.

கடல் கோஷித்துக் கொண்டேயிருக்கும், எம்பெருமானும் *ஏதத் வ்ரதம் மம* மோக்ஷயிஷ்யாமி மா சுச:* இத்யாதிகளைச் சொல்லி கோஷித்துக் கொண்டேயிருப்பன்.

கடல் ஒரு நாளும் வற்றாது, எம்பெருமானுக்கும் ஒரு நாளும் நாஸ்தித்வ முண்டாகாது.

கடல் ஏறுவதும் வடிவது மாயிருக்கும், எம்பெருமானும் ஸேவை ஸாதிப்பதும் மறைவது மாயிருப்பன் என்றிப்படிப்பட்ட பலபல சிறு நயங்களுங் காண்க.

செய்யதோர் நாயிற்றைக் காட்டிச் சிரீதரன்மூர்த்தி யீதென்னும்=இரவெல்லாம் கடலோசையோடே வருந்திக்கிடந்து, பொழுதுவிடிந்தவாறே ஸூர்யனைக் கண்டதும் 'ஸ்ரீதரனுடைய வடிவு இது' என்கின்றாள்.

கீழே கடல்வண்ணனாக அநுஸந்திக்கப்பட்ட எம்பெருமானை இப்போது ஸூர்யனாக அநுஸந்திப்பதற்கு, என்ன பொருத்தம்? என்று சங்கை பிறக்கும். இங்கு, ஆறாயிரப்படி யருளிச்செயல் காண்மின்;—'எம்பெருமானும் பிராட்டியும்—ஆதித்யனும் அவனுடைய ப்ரபையும்போல இருக்கையாலே, அந்த ஆதித்யனைக்காட்டி ஸ்ரீதரன்மூர்த்தி யீதென்னும்'' என்பதாம்.—ஸ்ரீ ராமாயணத்தில் ராவணனை நோக்கிப் பிராட்டி சொல்லுகையில் ''அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா'' என்றாள்; ராவணவதத்திற்குப் பிறகு பிரமன் முதலிய தேவர்களைநோக்கி ஸ்ரீராமபிரான் சொல்லுகையில் ''அநந்யா ஹிமயா ஸீதா பாஸ்கரேண ப்ரபா யதா''. என்றான். இங்ஙனே திவ்ய தம்பதிகளின் திருவாக்கினால் எம்பெருமான் ஸூர்யனோடொப்பப் பரிகணிதனானமையால் ஸூர்யனைப் பார்க்கும்போது சிரீதரன் நினைவுக்கு வரக் குறையில்லை. ''ப்ரபா ப்ரபாவான்களைக் கண்டவாறே அவளுமவனுமாக இருக்குமிருப்பை நினையா நின்றாள்.'' என்பது ஈடு முப்பத்தாறாயிரம்.

ஆசார்ய ஹ்ருதயத்தில் "புரவி யேழொருகாலுடைய தேரிலே" என்று தொடங்கியுள்ள சூர்ணிகையில் ''சிரீதரன்மூர்த்தி யீதென்னும்'' என்கிற இந்தப் பாசுரம் எடுத்தாளப்பட்டுள்ளது. அவருடைய திருவுள்ளத்தின்படி பார்க்குமளவில், ''த்யேயஸ் ஸதா ஸவித்ருமண்டல மத்யவர்த்தீ நாராயண:'' என்கிறபடியே எம்பெருமான் ஸூர்யமண்டல மத்யஸ்தனாதலால் அதுபற்றி ''செய்யதோர் நாயிற்றைக் காட்டிச் சிரீதரன்மூர்த்தி யீதென்னும்'' என்றதாகக் கொள்ளலாம்.

சென்னை-600 005.
159930
JL
022 m 211, N2l
N38 - 12·4

கண்ணீர்மல்க நின்று நையும்=ஸீதரன் என்னும்படியே புருஷகார பூதையான ஸ்ரீமஹாலக்ஷ்மி அருகேயிருக்கச் செய்தேயும் பேறிழந்த நான் இனி யார் புருஷகாரமாகப் பெறவிருக்கிறே னென்று உடைகுலைப்படா நின்றாள். ஸ்ரீமந் நாராயணனென்று கூடச் சொல்லமாட்டாதே நாரணன் என்கின்றாள்.

எம்பெருமானுக்குப் போலியான பொருள்களையும் அவனோடு தொடர்புள்ள பொருள்களையும் அநுஸந்திக்க வநுஸந்திக்க, நித்யாநுபவசாலிகளான நித்ய ஸூரிகளின் வடிவில் பிறக்கும் புகர் இவட்குப் பிறக்கின்றமையைத் தாய் தெரிவிக்கின்றாள் என் தெய்வவுருவிற் சிறுமான் என்பதனால்.

செய்கின்றதொன்று அறியேன்=இவள் தொடங்குவது என்ன? தலைக்கட்டுவது என்ன? என்பதொன்று மறிகின்றிலே னென்றபடி. ... . (உ)

அறியும்செந்தீயைத்தழுவி அச்சுதனென்னும்மெய்வேவாள் *
எறியும்தண்காற்றைத்தழுவி என்னுடைக்கோவிந்தனென்னும் *
வெறிகொள்துழாய்மலர்நாறும் வினையுடையாட்டியேன்பெற்ற *
செறிவளைமுன்கைச்சிறுமான் செய்கின்றதென்கண்ணுக்கொன்றே. (௩)

வினையுடை யாட்டியேன் பெற்ற	கொடுவினையேனாகிய நான் பெற்ற,	எறியும்	வீசுகின்ற
செறி வளை முன் கை சிறு மான்	நெருங்கின வளையல் களையணிந்த முன்கை களையுடைய இவ்விளம் பெண்ணானவள்,	தண் காற்றை தழுவி	குளிர்ந்த காற்றைத் தழுவி
		என்னுடை கோவிந்தன் என்னும்	'என்னுடையகண்ணன்' என்கிறாள்;
		வெறிகொள்	பரிமளம்மிக்க
அறியும்	சுடுமென்று எல்லாராலும் அறியப்பட்ட	துழாய் மலர்	திருத்துழாய் மலர்கள்
செம் தீயை தழுவி	சிவந்த நெருப்பைத் தழுவி	நாறும்	மணக்கப் பெற்றிருக்கின்றாள்;
அச்சுதன் என்னும்	'எம்பெருமான்' என்கிறாள்;	செய்கின்றது	(இங்ஙனே இவள்) செய்கின்ற தொழில்கள்
மெய் வேவாள்	உடம்பு வேகின்றிலள்;	என் கண்ணுக்கு ஒன்றே	என் கண்களுக்கு ஒன்றுதானோ?

* * * [அறியுஞ் செந்தீயை] மகளுடைய அதிப்ரவ்ருத்திகளைச் சொல்லப் புகுந்து, இவற்றுக்குக் கணக்கில்லை யென்கிறாள். எம்பெருமானுடைய திரு வடிவைச் சொல்லுமிடங்களில் "தேஜஸாம் ராசிம் ஊர்ஜிதம்" என்றும், "குழுமித் தேவர் குழாங்கள் கைதொழச் சோதி வெள்ளத்தினுள்ளே யெழுவதோருரு" என்றும் தேஜ:புஞ்ஜமாகவே சொல்லுவர்கள். பராங்குச நாயகியானவள் செவ்விய தீயைக் காணும்போது அதனை அச்சுதனாகவே ப்ரதிபத்தி பண்ணித் தழுவுகின்றாள்; அந்த ப்ரதிபத்தியின் சுத்தியாலே, மெய்வேவாள்—உடம்பில் தாஹமுண்டாவது கிடையாது. அக்நிதேவதை தன் காரியத்தைச் செய்யாதிருக்-

கோள் பேசுமளவன்றென்னும் அர்த்தத்தை வம்மின் விரோதமினைச் சோல் எவ்வுயிர்க்குமறியவென்று அடைவுகேட அதபஸ்கர்க்கு உப தேசிக்கிறது ஞாலத்தார் பந்தபுத்தியும் அநர்த்தங்கண்டு ஆற்றாமையும் மிக்க க்ருபையுமிறே.

204. தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடிபணிந்தவர்க்

என்றும், "தத்வித் ப்ரணிபாதேந பரிப்ரச்நேந ஸேவயா—தத் வித்தி ப்ராணி பாதேந பரிப்ரச்நேந ஸேவயா" என்றுஞ் சொல்லுகிறபடியே அபிமானபங்கமாய் ப்ரணிபதந அபிவாதந பரிப்ரச்ந ஸேவையாகிற இவற்றிலே ஊன்றி நெடுங்காலம் அநுவர்த்திப்பவர்களாயிருக்க வேண்டும். இப்படியிருக்குமவர்களுக்கு "உளங் கொள் ஞானத்து வைம்மின்" என்றும் "பேசுமளவன்றிது வம்மின் நமர்! பிறர் கேட்பதன் முன்" என்றும் இப்படி அஷட்கர்ணமாக உபதேசிக்க வேண்டிய அர்த்த விசேஷமல்லவோ? இதை "வம்மின் புலவீர்!" என்று வலிய அழைத்து "சொன்னால் விரோதமிது ஆகிலுஞ் சொல்லுவன் கேண்மினோ" என்று அபேக்ஷித்து, "ஏனச்சொல்லாயினுமாக" என்கையாலே 'ஆகிலுமாக' என்று பொகடு பொருளாகவும் "மற்றொன்றில்லை சுருங்கச் சொன்னோம் மாநிலத்தெவ்வுயிர்க்கும்" என்றும் "திண்ணம் நாமறியச் சொன்னோம்" என்றும் அனைவர்க்கும் ப்ரஸித்தமாம்படியாகவும் இப்படி அடைவு கேடாக உபதேசிக்கிறாரே ஆழ்வார்; இது எங்ஙனேயென்னில்; இப்படி உபதேசிப் பதற்கு மூன்று காரணங்களுண்டு: "ஞாலத்தார்தமக்கும் வானத்தவர்க்கும் பெருமான்" என்று நித்யவிபூதியிலுள்ளார்க்குப் போலே லீலாவிபூதியிலுள் ளார்க்கும் அவனோடு ஸம்பந்தம் ஒத்திருக்க இவர்கள் அவனையிழந்து கிடக் கவொண்ணாதென்கிற ஸம்பந்தவுணர்ச்சி ஒரு காரணம். "கண்டுஆற்றேனுலகி யற்கை" என்று இவர்கள் ஸம்ஸாரத்தில் படுகிற அநர்த்தங்கண்டு பொறுக்க மாட்டாமை மற்றொரு காரணம். அவ்வளவேயன்றிக்கே "அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே" என்கிறபடியே எம்பெருமான் கைவிட்டவர்களையும் திருத்தியல்லது நிற்கமாட்டாத கரைபுரண்ட காருண்யம் மற்றொருகாரணம்.

[ஆழ்வாரைப்போலே உபதேசிப்பவர்கள் மற்றுஞ்சிலருமுண்டென்றல்]

204. (1) ஸர்வலோக ஜநநியான ஸீதாபிராட்டி, (2) பிள்ளையான ப்ரஹ்லாதாழ்வான், (3) தம்பியான விபீஷணாழ்வான், (4) ப்ரக்ருதரான நம் மாழ்வார், (5) "மாறனடி பணிந்துய்ந்த இராமானுசன்" என்று ஆழ்வாரை அடி பணிந்து உய்ந்தவராக ப்ரஸித்தரான எம்பெருமானார் ஆகிய இவர்களுக்கே இழ்ச்சொன்ன மூன்றும் உண்டு.

(1) பிராட்டி தன்பக்கலிலே விபரீதபுத்தியைப் பண்ணி நிற்கிற பாபிஷ்டனான ராவணனைக் குறித்து ஹிதோபதேசம் பண்ணினமை ப்ரஸித்தம்.

கூமே இவையுள்ளது.

205. க்யாதிலாபபூஜாபேக்ஷையற மலர்நாடியாட்செய்ய, உய்யக்கொண்டு

---

(2) திருநாமஞ் சொன்னதுவே ஹேதுவாகப் பிறந்த தனக்குக் கொடிய தண்டங்கள் பண்ணும்படி ஏவின பாபிஷ்டர்களில் நல்லவனான இரணியனைக் குறித்தும் அஸுரபுத்திரர்களைக் குறித்தும் ப்ரஹ்லாதாழ்வான் உபதேசங்கள் செய்ததும் ப்ரஸித்தம்.

(3) தனக்கு ஹிதஞ்சொன்னது பொறாமல் திரஸ்கரித்த கொடியவனான ராவணனைக் குறித்து விபீஷணாழ்வான் ஹிதோபதேசம் பண்ணினதும் ப்ரஸித்தம்.

(5) எம்பெருமானார் ஒராண் வழியாகப் பூருவர்கள் உபதேசித்துப் போந்த நியமத்தைக் குலைத்துப்பலரையும் உபதேசிக்கும்படி பண்ணியும், பலகால் (திருக்கோட்டியூர் நம்பி பக்கல்) நடந்துகேட்ட பரமார்த்தத்தை ஓலக்கமாகவைத்து உபதேசித்ததும் ப்ரஸித்தம்.

[ஆழ்வாருடைய உபதேசம் பலித்தமை.]

205. (இப்படி விமுகரான ஸம்ஸாரிகளைக் குறித்து ஆழ்வார் உபதேசித்தவிது ஸபலமாயிற்றோ வென்னில்;) தமக்கு ஒரு ப்ரஸித்தியுண்டாகவேணு மென்றுவது, தமக்கொரு லாபமுண்டாகவேணு மென்றுவது, தம்மைச் சிலர் பூஜிக்கப்பெறவேணு மென்றுவது அபேக்ஷையில்லாதவர் ஆழ்வார்; இப்படிப் பட்டவிவர் சேஷத்வபரிமள யுக்தமான ஆத்மபுஷ்பங்களைத்தேடி * ஆட்செய்தாழிப்பிரானைச் சேர்ந்தவன் * என்கிறபடியே கைங்கர்ய ரூபமாக உபதேசிக்கையாலே உலகமெல்லாம் திருந்திற்று; அதனால் ஆழ்வாருடைய மூன்று இழவுகள் தீர்ந்தனவாயின: (எங்ஙனே யென்னில்;) திருக்குருகூரதனை உளங்கொள் ஞானத்துவைம்மின் உம்மையுய்யக்கொண்டு போகுறிலே'' என்கிற பாசுரத்தை நோக்குமிடத்தில், ஸம்ஸாரிகள் உஜ்ஜீவிக்கப் பெறவில்லையே யென்கிற இழவு ஆழ்வார்க்கு இருந்ததாகத் தெரியவருகிறது; அந்த இழவும் தீர்ந்ததாயிற்று. ''இழந்த வெம்மாமைத் திறத்துப்போன என்னெஞ்சினாருமங்கே யொழிந்தார், உழந்தினியாரைக்கொண்டு என்னுசாகோ?'' என்கிற பாசுரத்தை நோக்குமிடத்தில் தமக்கு உசாத்துணையில்லாமையால் இழவு உள்ளதாகத் தெரிகின்றது; அதுவும் தீர்ந்ததாயிற்று. ''வாளும்வில்லுங்கொண்டு பின்செல்வார் மற்றில்லை'' என்கிற பாசுரத்தை நோக்குமிடத்தில் எம்பெருமானுடைய ஸௌகுமார்யமறிந்து பரிகைக்கு ஒருவருமில்லையே யென்கிற இழவு இருந்ததாகத் தெரிகின்றது: அதுவும் தீர்ந்ததாயிற்று. தம்முடைய உபதேசபலமாக எல்லாருமுஜ்ஜீவித்துத் தமக்கு உசாத்துணையாயுமிருந்து அவனுக்கு மங்களாசாஸநமும் பண்ணுகையாலே மூன்று இழவுகளும் தீர்ந்தனவாகக் குறையில்லையே. ஆழ்

ஆரைக்கொண்டு வாளும் வில்லுங்கொண்டென்கிற இழவுகள் தீரப்பெற்றது.

206. ப்ரஹ்மநிஷ்டரும் ஸம்வத்ஸர வாஸிகளுமாகில், ஏபாவம் பயனன்

வார் க்யாதிலாபபூஜாபேக்ஷை யில்லாதவர் என்னுமிடம் எங்ஙனே தெரிகின்றதென்னில்; * நீசனேன் நிறையொன்றுமிலேன் * என்று தண்மைக்கு எல்லையாகத் தம்மை அநுஸந்திக்கையாலே ப்ரஸித்தியில் விருப்பமற்றவர்; * கொள்ளென்று கிளர்ந்தெழுந்த பெருஞ்செல்வம் நெருப்பாக * என்று ஐச்வர்யத்தை அக்நிஸமமாகக் காண்பவராதலால் லாபத்தில் விருப்பமற்றவர்; * தொண்டர் தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன் * என்று பாகவத சேஷத்வத்தின் எல்லையிலே நிற்கிறவர்களுக்குத் தம்மை அடிமையாக நினைத்தும் * ஓதவல்லபிராக்கள் நம்மையாளுடையார்கள் பண்டே * என்று தம்முடைய திவ்யப்ரபந்தத்தில் அந்வயித்தவர்களைத் தமக்கு சேஷிகளாக நினைத்துமிருக்கையாலே பூஜையில் அபேக்ஷையற்றவர் என்பது எளிதில் விளங்கும்.

இங்ஙனே மூன்றுவகையான அபேக்ஷைகளும் ஆழ்வார்க்கு இல்லையென்பதை இங்குச் சொல்லுவது எதற்காக வென்னில்; உலகத்தில் சிலர் பிரபந்தங்கள் இயற்றுவது இம்மூன்றுவகைப்பட்ட அபேக்ஷைகளினாலாகுமத்தனை; உலகம் திருந்தவேணுமென்றுவது, தங்களுக்கு உசாத்துணை கிடைக்கவேணுமென்றுவது, எம்பெருமானுக்கு மங்களாசாஸநபரர்கள் வாய்க்கவேணுமென்றுவது அவர்களுக்கு அபேக்ஷையில்லாமையாலே அன்னவர்கள் செய்யும் உபதேசம் ஸபலமாவதற்கு ப்ரஸக்தியில்லை; க்யாதிலாபபூஜாபேக்ஷைகளே அவர்களுக்கு ஸித்திக்கும். ஆழ்வார்க்கு க்யாதிலாபபூஜாபேக்ஷைகள் சிறிதுமில்லாமையாலும், 'ஸம்ஸாரிகள் உய்யவேணும், நமக்கு உசாத்துணை கிடைக்கவேணும், எம்பெருமானுக்குக் காப்பிடுவார் நிரம்பவேணும்' என்கிற அபேக்ஷைகளே அதிகரித்திருக்கையாலும் இவருடைய உபதேசம் பலித்ததாகைக்குத் தகுதியுண்டு என்று காட்டினபடி.

மூலத்தில் ''மலாநாடி'' என்பதற்கு விஷயவாக்யமான பாசுரம் இரண்டு ஆகலாம்: * நறிய நன்மலர்நாடி * * நாடாத மலர்நாடி * என்ற இரண்டு பாசுரங்களிலும் மலர்நாடி என்பது இருக்கையாலே அவ்விரண்டு பாசுரங்களில் ஒன்று இங்கு விவக்ஷிதமாகவேணும். ''நாடாதமலர்நாடி'' என்கிற பாசுரமே இங்கு விவக்ஷிதமாவதற்கு ஔசித்யாதிசயமுண்டென்பது மணவாளமாமுனிகளின் திருவுள்ளம்.

[ஆழ்வாருடைய நிர்ஹேதுக கருணையை நிலைநாட்டுதல்.]

206. ஆழ்வாருடைய உபதேசம் ஸபலமாயிற்றென்று கொள்ளுமளவில், இவரிடத்தில் உபதேசம் கேட்ட சிஷ்யர்கள் [ஸம்ஸாரிகள்] சாஸ்த்ரமுறையின்படியே உபஸத்திபண்ணினார்களென்றும், இவரும் அந்த உபஸத்தியினால் ப்ர

ளுகிலுஞ் சேராது.

ஸங்கராதி சாஸ்த்ரம் விதித்த கட்டளையிலே நின்று உபதேசித்தாரென்றும் கொள்ளலாமே; அப்படியல்லாமல் (203, 204 சூர்ணிகைகளிற்படியே) * ஞாலத்தார் பந்த புத்தியும் அநர்த்தங்கண்டு ஆற்றாமையும் மிக்கக்ருபையுமடியாகவே உபதேசித்தாரென்றும், ஸம்ஸாரிகள் விமுகர்களாகவே யிருந்தார்களென்றும் ஏன் கொள்ளவேணுமென்னில்; இங்ஙனே கொள்ளவேண்டிய ஆவச்யகதைக்கு நிதாநம் சொல்லுகிறது.—(1) ஆழ்வார் ப்ரஹ்மநிஷ்டராகில் * ஏபாவம் பரமே* என்கிற பாசுரம் சேராது. (2) ஆழ்வார்பக்கலில் உபதேசம் கேட்டவர்கள் ஸம்வத்ஸரவாஸிகளாகில் * பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணிகொள்வான் * என்கிற பாசுரம் சேராது—என்று இங்ஙனே யோஜித்துக்கொள்ளவேணும். இதனால், ஆழ்வார் ப்ரஹ்மநிஷ்டரல்லர், ஸம்ஸாரிகள் ஸம்வத்ஸரவாஸிகளல்லர் என்றதாகத் தேறுகின்றதன்றோ; ஸம்ஸாரிகள் ஸம்வத்ஸரவாஸிகளல்லர் என்று தேறுவதனால் குறையொன்றுமில்லை; ஆழ்வார் ப்ரஹ்மநிஷ்டரல்லர் என்று தேறலாகாதே என்று சிலர் சங்கிக்கக்கூடும். 'ஆழ்வார் ப்ரஹ்மநிஷ்டரல்லர்' என்பதன் கருத்து யாதென்று ஆராயவேணும். "பரீக்ஷ்ய லோகாந் கர்மசிதாந் ப்ராஹ்மணோ நிர்வேதமாயாந் நாஸ்த்யக்ருத: க்ருதேந, தத்விஜ்ஞாநார்த்தம் ஸ குருமேவாபிகச்சேத் ஸமித்பாணி: ச்ரோத்ரியம் ப்ரஹ்மநிஷ்டம்" என்கிற உபநிஷத்திலுள்ளதான ப்ரஹ்மநிஷ்டமென்கிற பதம் இங்குக் கொள்ளப்பட்டிருக்கின்றது. கர்மபலமான ஸாம்ஸாரிகபோகங்களின் அல்பாஸ்திரத்வாதி தோஷத்தையும், நித்யனை பரமாத்மாவானவன் கர்மஸாத்யனல்லன் என்பதையும் அநுஸந்திக்கையாலுண்டான நிர்வேதத்தோடே சமதமோபேதனாய் உபஹாரபாணியாய்க்கொண்டு, ச்ரோத்ரியனாய் ப்ரஹ்மநிஷ்டனான ஆசார்யனை உபஸத்திபண்ணவேணுமென்பது மேற்குறித்த உபநிஷத்வாக்யத்தின் பொருள். ஆகஇங்ஙனே சொல்லப்பட்டிருக்கிறபடியே ஆழ்வார் உபஸத்திபண்ணப்பெற்ற ஆசார்யராகில் என்றபடி. அப்படி உபஸத்திபண்ணப்பெற்று உபதேசித்தவரல்லர் என்றதாகத் தேறிநிற்கும். உபதேசிக்குமவரான ஆழ்வார் 'அடைவுபட உபஸத்திபண்ணினவனுக்கொழிய உபதேசிக்கக்கடவோமல்லோம்' என்றிருக்கும் ப்ரஹ்மநிஷ்டராகில்—என்றதாகக்கொள்க. இப்படியாகில் ஏபாவம் பரமே! என்றது சேராது; (ஏனென்னில்) ஆழ்வார் உபதேசிக்கத் தொடங்கும்போது ஏ பாவம் பரமே! என்றார்; அதாவது—ஓ பாவம்! இப்படி விமுகரான ஸம்ஸாரிகளுக்கு உபதேசிக்கும்படி என் தலையிலெழுத்தாயிற்றே! என்று வெறுத்துச்சொன்னார்; அடைவுபட உபஸத்திபண்ணினவர்களுக்கு உபதேசிப்பவரல்லர் என்பது இதனாலே விளங்கிற்று. இவர் பக்கலில் உபதேசம் கேட்டவர்கள் ஸம்வத்ஸரவாஸிகளல்லர் என்பது இனி நிரூபிக்கப் படுகிறது. "நாஸம்வத்ஸரவாஸிநே ப்ரப்ரூயாத்" என்பது சாஸ்த்ரவிதி. ஒரு ஸம்வத்ஸரம் பரீக்ஷித்துப் பின்னை உபதேசிக்கக்கடவதாகக்

207. மெய்ந்நின்று மங்கவோட்டுக்கு நடுவே அநுபவகர்ப்போபதேசம்.

208. இவற்றுக்கு—மந்த்ர வித்யநுஸந்தாந ரஹஸ்யங்களோடே சேர்த்தி.

கட்டளையுள்ளது. இதன்படி ஓராண்டு குருகுலவாஸம்பண்ணி உபதேசம் கேட்டவர்களல்லர்; அப்படியிருப்பர்களாகில் ஆழ்வாருடைய ப்ரதம சிஷ்யரானவர் * பயனன்றாகிலும் பாங்கலராகிலும் செயல் நன்றாகத் திருத்திப்பணிகொள்வான் * என்று ப்ரயோஜநசூந்யராகிலும் அவிதேயராகிலும் தம்முடைய செயலாலே எல்லாம் நன்றாம்படி திருத்திக்கொள்வாரிவரென்று க்ருதஜ்ஞதையாலே உகந்து சொன்னவுக்தி சேராதென்றபடி. 'உபஹாரபாணிகளாய் நாம் அநுவர்த்தித்தன்றோ பெற்றோம்' என்றிருக்கையொழிய இப்படிச்சொன்னது சேராதென்கை. இப்படி ஆசார்யோக்தியும் சிஷ்யோக்தியுமாகையாலே முன் சொன்ன ஹேதுக்களாலே விமுகரைக் குறித்து உபதேசிக்க, உபதேசசக்தியாலே அனைவரும் திருந்தி இவருடைய இழவுகளெல்லாம் தீர்ந்தனவென்றே கொள்ளவேணுமென்றதாயிற்று.

[பரோபதேச தசையிலும் பகவதநுபவம் இடையறதென்றல்.]

207. ஆழ்வார் பரோபதேச பராமளவில் இவர்க்கு (அக்காலத்தில்) பகவதநுபவம் இடையற்றதாகாதோவென்னில்; ஆகாது. * மெய்ந்நின்று கேட்டருளாய் அடியேன் செய்யும் விண்ணப்பமே * என்றது முதல் * மங்கவொட்டுன்மாமாயை * என்கிறதளவாக நடுவுள்ள நான்கு திவ்யப்ரபந்தங்களும், அநுபவமுள்ளே செல்லாநிற்கச்செய்தே யுண்டான பரோபதேசம். [ஆழ்வார் தமக்கு அநுபவகர்ப்பமான உபதேசமும் உபதேசகர்ப்பமான அநுபவமுமாய்ச் செல்லும் என்றிறே நம்முதலிகள் அருளிச்செய்வது. ஆகையால் இவர்க்கு அநுபவவிச்சேதம் ஒருகாலுமில்லை.]

இங்கே "மெய்ந்நின்று மங்க வொட்டுக்கு நடுவு" என்று மூலமுள்ளது; "பொய்ந்நின்ற ஞானந்தொடக்கிப் பிறந்தாருயர்ந்தேயளவும்" என்று ஆதியையும் அந்தத்தையும் தொட்டுக் கூறலாமாயிருக்க அங்ஙனம் கூறாதது ஏன்? என்று சிலர் சங்கிப்பர்கள்; உபதேசத்திற்கு உபக்ரமவாக்யத்தையும் உபஸம்ஹாரவாக்யத்தையும் எடுத்துக்காட்டுவதே இங்கு விவக்ஷிதம். "மெய்ந்நின்று கேட்டருளாய்" என்பதே உபதேசத்திற்கு உபக்ரமம்; "மங்கவொட்டுன்மாமாயை" என்பதே உபதேசத்திற்கு உபஸம்ஹாரம். ஆதலால் இவ்விரண்டு சந்தைகளையும் கூட்டியெடுத்ததென்றுணர்க.

[ஆழ்வாருடைய நான்கு ப்ரபந்தங்களும் ரஹஸ்யத்ரயார்த்த ப்ரதிபாதகமென்றல்.]

208. நம்மாழ்வாருடைய பிரபந்தங்கள் நான்குக்கும் திருமந்த்ரம் த்வயம் சரமச்லோகமாகிற ரஹஸ்யத்ரயத் தோடே சேர்த்தி. அதாவது—ரஹஸ்யத்ரயத்தில் ஸங்க்ரஹமாகவும் நுட்பமாகவும் காட்டப்பட்டிருக்கின்ற

209. அளிப்பானடியேனடைக்கலம் சூடிய பொய்யாதானுமழுந்தாரென்று ஸ்வரூபவிரோதி நிவ்ருத்திகளையும், தாமரையுந்திப் பெருமாமாயன் ஆளா

பொருள்களை இந்த நான்கு ப்ரபந்தங்களில் விரிவாக வுரைக்கப்படுகின்றன வென்றவாறு.

"மந்த்ரவிதிஅநுஸந்தான ரஹஸ்யங்களோடே" என்ற மூலத்திற்கு— மந்த்ரரஹஸ்யமென்ன, விதிரஹஸ்யமென்ன, அநுஸந்தான ரஹஸ்யமென்ன இவற்றோடே என்று பொருள். மந்த்ரரஹஸ்யமென்றது திருமந்த்ரமாகிற ரஹஸ்யம் என்றபடி. விதிரஹஸ்யமென்றது ஸித்தோபாய வரணத்தை ஸாங்கமாக விதிக்கிற சரமச்லோகம் என்றபடி. அநுஸந்தான ரஹஸ்யமென்றது உபாய வரணத்தையும் உபேய ப்ரார்த்தனையையும் ஸக்ரமமாக ப்ரகாசிப்பியா நின்றுகொண்டு காலக்ஷேபத்துக்கும் போகத்துக்குமாக ஸாரஜ்ஞராலே ஸதா அநுஸந்தானம் செய்யப்படும் த்வயம் என்றபடி.

இன்ன ப்ரபந்தத்திற்கு இன்னரஹஸ்யத்தோடே சேர்த்தியென்பதை வகையிட்டு விளக்குதல்.

209. எந்த ப்ரபந்தத்திற்கு எந்த ரஹஸ்யத்தோடே சேர்த்தியென்னில், அது நிரூபிக்கப்படுகிறது. திருவிருத்தமும் திருவாசிரியமும் சேர்ந்து திருமந்த்ரார்த்த விவரணமாகின்றது. ப்ரணவத்தையும் நமஃ பதத்தையும் விவரிக்கிறது திருவிருத்தம். நாராயணாய என்பதை விவரிக்கிறது திருவாசிரியம். எங்ஙனே யென்னில்; ப்ரணவத்தில் முதல் அக்ஷரமான அகாரம் எம்பெருமான் ரக்ஷகனென்னுமிடத்தைக் காட்டுகிறது. "அவ-ரக்ஷணே" என்கிற தாதுவில் அகாரம் தேறுகிறபடியினால் ரக்ஷகத்வத்தைச் சொல்லுவதாகின்றது. திருவிருத்தத்தில் முதற் பாசுரத்தில் உயிரளிப்பான் என்பதனால் இந்த ரக்ஷகத்வம் [அகாரார்த்தம்] சொல்லிற்றாயிற்று.

சதுர்த்தியிலும் உகாரத்திலும் சொல்லுகிறபடியே எம்பெருமானுக்கு அநந்யார்ஹ சேஷமாய்—, ப்ரக்ருதேஃபரமாய், ஜ்ஞாநாநந்தலக்ஷணமாக மூன்றுமக்ஷரமான மகாரத்தில் சொல்லப்படுகிற ஆத்மஸ்வரூபம், ஈற்றடியில் அடியேன் என்றதனால் சொல்லிற்றாயிற்று.

அகாரத்தின்மேல் ஏறிக்கழிந்திருக்கின்ற சதுர்த்தியானது (வியாகரண சாஸ்த்ரப்படி) ஸம்ப்ரதானத்தில் வந்ததாம்; அன்றியும் "ப்ரஹ்மணே த்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத—ப்ரஹ்மணே த்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத." என்கிறபடியே ப்ரணவத்துக்கு ஆத்மஸமர்ப்பணம் திரண்ட பொருளாகவுமுள்ளது. ஆழ்வாரும் விரோதி பயத்தாலே கலங்கினதசையிலே * அடியேனடியாவியடைக்கலம் * என்று அந்த ஆத்மஸமர்ப்பணத்தைக் காட்டியுள்ளாராதலால் இவ்வளவும் ப்ரணவார்த்தம் சொல்லிற்றாயிற்று.

கவே வாழியவென்று ப்ராப்யபலங்களையும், நெறிகாட்டி மனத்துக் கொண்டு கண்ணனலடித்துக் கண்டிலமால் யாதாகிலென்று உபாயத்

ப்ரணவத்தில் சொல்லப்பட்ட பகவதநந்யார்ஹ சேஷத்வமானது பாகவத சேஷத்வபர்யந்தமாயிருக்குமென்னுமிடம் நமஸ்ஸில் ஆர்த்தமாகச் சொல்லப்படுகிறது. இதனை ஈற்றுப்பாசுரத்தில் "திருமால் திருப்பேர் வல்லாரடிக் கண்ணி சூடியமாறன்" என்பது காட்டும்.

நமஃ என்பதில் ஷஷ்டீவிபக்தியந்தமான மஃ என்பது அஹங்காரமமகாரங்களாகிற அவித்யையையும், தத்கார்யமான அக்ருத்ய கரணாதிகளையும் தத்கார்யமாய்வரும் தேவமநுஷ்யாதி ரூபமான ப்ரக்ருதி ஸம்பந்தத்தையும் தெரிவிக்கும். இதுபோலவே 'பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்குமழுக்குடம்பும்" "யாதானுமோராக்கையில்புக்கு அங்காப்புண்டு மாப்பவிழ்ந்தும்" என்ற பாசுரங்கள் காட்டும்.

நமஃ என்பதிலுள்ள நஞ்ஞானது அவித்யை முதலாக ஸம்ஸாரகர்த்தம மீறாகவுள்ள விரோதிகளின் நிவ்ருத்தியைச் சொல்லும்; "வன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்து-அழுந்தார்" என்கிற நிகமனப்பாசுரம் அப்படியே விரோதி நிவ்ருத்தியைத் தெரிவிக்கும்.—ஆக இவ்வளவாலும், ஸர்வரக்ஷகனை ஸர்வேச்வரனுக்கு அநந்யார்ஹ சேஷமாய் ஜ்ஞாநாநந்தலக்ஷணமாய் ததீய சேஷத்வ பர்யந்தமாயிருக்கும் ஆத்ம ஸ்வரூபத்தையும், ஸம்ஸாரஹேது பூதங்களான அவித்யை முதலிய விரோதிகளின் நிவ்ருத்தியையும் ப்ரதிபாதிக்கிற திருவிருத்தம்— திருமந்த்ரத்தில் ப்ரணவநமஃபதங்களோடு சேர்ந்திருக்குமென்றதாயிற்று.

இனி, நாராயணாய என்பதை விவரிக்கிறது திருவாசிரியம் என்று நிரூபிக்கப்படுகிறது. நாராயண பதத்தில் சொல்லப்படுகிற உபய விபூதி யுக்தமான ப்ராப்யவஸ்துவை "தாமரையுந்தித்தனிப் பெருநாயக" என்று தொடங்கி "எம்பெருமாமாயன்" என்னுமளவாகச் சொல்லிற்று. அந்த நாராயண பதத்தில் சதுர்த்தியின் அர்த்தமான பலஸ்வரூபத்தை "தனிமாத் தெய்வத்தடியவர்க்கு இனி நாமாளாகவே யிசையுங்கொல்" என்றும் "ஊழிதோறூழி யோவாது வாழியவென்று யாந்தொழ விசையுங்கொல்" என்றுஞ் சொல்லிற்று. ஆகவே திருவாசிரியம் நாராயணாய என்பதை விவரித்ததாயிற்று. ப்ராப்யமும் பலமுமாகிற இரண்டையும் பிரதிபாதிக்கிற திருவாசிரியம்—ப்ரக்ருதி ப்ரத்யயாம்சங்களாலே இவ்விரண்டையும் ப்ரதிபாதிக்கிற நாராயணாயவோடே சேர்ந்திருக்கை மிகவும் பொருத்தமுடையதே. ஆகத் திருவிருத்தமும் திருவாசிரியமுமாகிற இரண்டு பிரபந்தமும் சேர்ந்து திருமந்த்ரத்தை விவரித்தமை நிரூபிக்கப்பட்டதாயிற்று.

இனி, பெரிய திருவந்தாதி சரமச்லோக விவரணமென்று நிரூபிக்கப்படுகிறது. சரமச்லோகத்தில் "ஸர்வ தர்மாந் பரித்யஜ்ய" என்று உபாயாந்தரங்கள்

154930

...த்தையுஞ் சொன்னவை மந்த்ரச்லோகங்களோடே சேரும்.

210. த்வயார்த்தம் தீர்க்க சரணாகதி யென்றது ஸாரஸங்க்ரஹத்திலே.

விடத்தக்கதையென்று சொல்லப்பட்டது * கெடுகாட்டி நீகுதியோ * என்கிற பாசுரம் இதற்குச் சேர்ந்திருக்கும். 'உபாயாந்தரங்களைக்காட்டி என்னை அகற்றப் பார்க்கிறுயோ?' என்பது இப்பாசுரத்தின் கருத்தாகையாலே உபாயாந்தரம் பரித்யாஜ்யமென்பது விளங்கிற்று.

"மாம் ஏகம் சரணம் வ்ரஜ" என்று மாகஸாத்யவஸாய ரூபமான உபாயஸ்வீகாரம் சொல்லப்பட்டது போலே * வெங்கோட்டேறேழுடனே கொன்றுனையே மனத்துக்கொண்டு * என்கிற பாசுரத்திலுல் அது சொல்லப்பட்டது.

"அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்று உபாயபூதன் பண்ணும் ஸர்வபாபவிமோசனம் சொல்லப்பட்டது போலே "பொருமனத்தலே வன்துன்பத்தை மாற்றினேன் வானோரினத்தலைவன் கண்ணனால்யான்" என்றும், "எம்பிறையார் தந்த அருளென்னும் தண்டாலடித்து—வல்வினையைக் காணும் மலையும் புகக்கடிவான்" என்றும் அது சொல்லிற்று.

* வானேமறிகடலோ * என்று தொடங்கி * வன்துயரை—மருங்குக் கண்டிலமால் * என்று விரோதிகளானவை போனவிடம் தெரியாதபடி தன்னையே விட்டுப்போயின வென்கையாலே 'நானும்வேண்டா நீயும் வேண்டா, அவை தன்னையே விட்டுப்போம்' என்கிற ணிச்சின் அர்த்தம் சொல்லிற்று.

* அடர்பொன் முடியானை * என்று தொடங்கி * யாதாகில் யாதேயினி * என்று—இனிக்கருமம் இருந்தாலென்ன? நசித்தாலென்ன? ஏதானல் நமக்கு என் வரும்? என்று நிர்ப்பரத்வாநுஸந்தானம் பண்ணினது "மா சுச:" என்கிற பதத்தாலே பலிதமானது. ஆக, உபாய ப்ரதி பாதகமாயிருக்கிற பெரிய திருவந்தாதி சரமச்லோகத்தோடே சேருமென்று நிரூபிக்கப்பட்டதாயிற்று.

[மூலத்தில், "உபாயத்தையும் சொன்னவை" என்றது—சொன்ன ப்ரபந்தங்கள் என்றபடி.]

[திருவாய்மொழி த்வயார்த்த விவரணமென்பது.]

210. சரமப்ரபந்தமான திருவாய்மொழியானது த்வயத்தின் பொருளை ப்ரதிபாதிக்கிறதென்னுமிடம் விரிவாக உபபாதிக்க வேண்டுகையாலும், இதைப் பற்றித் தம்முடைய திருத்தமையனாரான பிள்ளைலோகாசார்யர் ஏற்கனவே ஒரு ப்ரபந்தம் இட்டருளியிருக்கையாலும் அதிலே கண்டு கொள்வது என்கிற திருவுள்ளத்தோடே "த்வயார்த்தம் தீர்க்க சரணாகதியென்றது ஸாரஸங்க்ரஹத்திலே